பக்கங்கள் : 20
viber : 076 636 3378
E-mail: valampurii@yahoo.com

# வலம்புரி
## சங்குநாதம்

சங்கு 23
ஒலி 350 வள்ளுவர் ஆண்டு 2053 கார்த்திகை 18 ஞாயிற்றுக்கிழமை (04.12.2022) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829




இன்னும் இருமாத காலத்திற்குள்

## பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும்

### சபையில் முதல்வர் சுசில் பிரேமஜயந்த



(கொழும்பு)
பயங்கரவாத தடை சட்டத்திற்கு பதிலாக பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலம் இன்னும் இரு மாத காலத்திற்குள் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

அரசியல் மற்றும் பொருளாதார மறுசீரமைப்புக்கான ஆரம்பக் கட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக சபை முதல்வர் சுசில் பிரேமஜயந்த எதிர்க்கட்சிகளின் பிரதம கொறடா லக்ஷ்மன் கிரியெல்லவிற்கு பதிலளித்தார்

சபாநாயகர் தலைமையில் நேற்று சனிக்கிழமை பாராளுமன்ற அமர்வு கூடிய போது நாட்டின் அரசியல் மற்றும் 19

2023 ஆம் ஆண்டு முதல்

## வீட்டில் இருந்தபடியே கடவுச்சீட்டு பெறலாம்

(கொழும்பு)
2023 ஆம் ஆண்டு ஜனவரி முதல் கடவுச்சீட்டுகளை இணைய வழியில் வழங்குவதற்கான விண்ணப்பங்களை குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களம் ஏற்றுக்கொள்ளவுள்ளது.

திணைக்களத்தின் தகவல் தொழில்நுட்ப கட்டுப்பாட்டாளர் சம்பிகா ராமவிக்ரம இதனைத் தெரிவித்துள்ளார்.

இந்தப் புதிய இணையவழி விண்ணப்ப 19

தொலைபேசியில் அவதானமாயிரு

## தங்கைக்கு கடிதம் எழுதிவிட்டு இளம் பெண் மரணம்

### வடமராட்சியில் சம்பவம்



(கரணவாய்)
வடமராட்சி, கரவெட்டிப் பகுதியில் இளம் பெண் ஒருவர் விபரீத முடிவெடுத்து உயிரிழந்துள்ளார்.

நேற்று முன்தினம் இச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. 19

## தாவடியில் வாள்வெட்டு இருவர் படுகாயம்

(யாழ்ப்பாணம்)
யாழ்ப்பாணம் பொலிஸ் பிரிவிற் குட்பட்ட தாவடியில் நேற்று இரவு இடம்பெற்ற வாள்வெட்டு சம்பவத்தில் இருவர் படுகாய மடைந்துள்ளனர்.

தாவடி மதுபான நிலையத்தில் ஏற்பட்ட முரண்பாட்டினையடுத்து, ஐயனார் கோவிலுக்கு அருகாமையில் குறித்த வாள்வெட்டு சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இதன்போது காங்கேசன்துறை வீதி, 19

பிரச்சினைகளுக்கு

# ஒரே தீர்வு தேர்தலே

### பாராளுமன்றில் சஜித்



*(கொழும்பு)* இலங்கை இன்று பெரும் சிக்கலில் உள்ளது. அனைத்துப் பிரச்சினைகளுக்கும் ஒரே தீர்வு தேர்தல் மூலம் புதிய மக்கள் ஆணையைப் பெறுவதுதான் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார். *(19 ஆம் பக்கம் பார்க்க)*

ஆட்சியை விட்டு தப்பிச் சென்றவர்கள்

## மீண்டும் அரசாங்கத்தை அமைத்துள்ளனர்

### அரசியல் மறுசீரமைப்பையே சர்வதேசம் வலியுறுத்துகின்றது - **லக்ஸ்மன் கிரியெல்ல**

(கொழும்பு)
நாட்டில் பொருளாதாரம் மற்றும் அரசியல் மறுசீரமைப்பு அவசியம் என சர்வதேசம் தொடர்ந்து வலியுறுத்துகின்ற நிலையில் ஆட்சியதிகாரத்தை விட்டு தப்பிச் சென்றவர்கள் மீண்டும் அரசாங்கத்தை அமைத்துள்ளார்கள்.

பொருளாதார மறுசீரமைப்பிற்கான திட்டங்கள் பாராளுமன்றத்திற்கு அறிவிக்கப்படாத நிலையில் எவ்வாறு அத்திட்டங்களுக்கு ஆதரவு வழங்குவது என எதிர்க்கட்சிகளின் பிரதம கொறடா லக்ஷ்மன் கிரியெல்ல கேள்வி எழுப்பினார்.

பாராளுமன்றத்தில் நேற்று சனிக்கிழமை விசேட கூற்றை முன்வைத்து உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிட்டதாவது,

நாட்டில் கடந்த மாதங்களில் போராட்டம் தோற்றம் பெற்ற போது இலங்கையில் உள்ள வெளிநாட்டு தூதுவர்களுடன் பேச்சுவார்த்தையை மேற்கொண்டவேளை இலங்கையில்



அரசியல் மற்றும் பொருளாதார மறுசீரமைப்பு அவசியம் என தூதுவர்கள் வலியுறுத்தினார்கள்.

ஆறு மாத காலத்திற்கு இடைக்கால அரசாங்கத்தை 19

## தமிழ் மக்கள் தொடர்பில் கரிசனை கொள்ளுங்கள்

### செல்வம் எம்.பி

(கொழும்பு)
வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் இடைநிறுத்தப்பட்டுள்ள வீட்டுத்திட்டத்தை துரிதமாக நிறைவு செய்ய எடுக்கும் நடவடிக்கைகளுக்கு தமிழ் தேசிய கூட்டமைப்பு முழுமையான ஒத்துழைப்பு வழங்கும்.

எமது மக்கள் படும் துன்பம் குறித்து கரிசனை கொள்ளுங்கள் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் வீடமைப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சரிடம் வலியுறுத்தினார். 19

## 24 மணி நேரமும் மதுபானக் கடைகளை திறக்க வேண்டும்

### பாராளுமன்றில் டயானா கமகே

(கொழும்பு)
இந்த நாட்டில் சுற்றுலாத்துறையை அபிவிருத்தி செய்வதற்கு மதுபானசாலைகள், பார்கள், ஹோட்டல்கள் மற்றும் கடைகள் என்பவற்றை 24 மணி நேரமும் திறந்து வைக்க ஏற்பாடு செய்ய 19

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி



தோற்றம் 10 . 11 . 1950

மறைவு 30 . 11 . 2022

## அமரர் மாணிக்கம் தவகுமாரன்

**(தலைவர், அகில இலங்கை தனியார் மருந்தக உரிமையாளர் சங்கம், யாழ்ப்பாணம்)**

கலையாத நினைவுகளுடன்
உதிரும் கண்ணீர் பூக்களால் அர்ச்சித்து
உங்கள் ஆத்மா சாந்தியடைய
எங்கள் கண்ணீர் துளிகளை
காணிக்கையாக்குகிறோம்.

அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(13654)

**All Island private Pharmacy owners' Association.**
**Jaffna, Killinochchi, Mannar**

# பொலிஸ் உயரதிகாரி வீட்டில் கொள்ளை

(கொழும்பு)

மோட்டார் சைக்கிளில் வந்த ஆயுதம் ஏந்திய கும்பல் ஒன்று பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஒருவரின் வீட்டில் கொள்ளையடித்துள்ளனர்.

வெலிபன்ன, பொந்துபிட்டிய குருந்த வீதியில் அமைந்துள்ள களுத்துறை வடக்கு, பல்வேறு முறைப்பாட்டுப் பிரிவின் பொறுப்பதிகாரி பொலிஸ் பரிசோதகர் நிஷான் குமார வசிக்கும் வீட்டிலேயே கொள்ளைச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

மோட்டார் சைக்கிள்களில் நேற்று பகல் வந்த ஆயுதம் தாங்கிய கும்பல் வீட்டில் இருந்த 2 கையடக்கத் தொலைபேசிகள் மற்றும் தங்க ஆபரணங்களை திருடிச் சென்றுள்ளதாக வெலிப்பன்ன பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

பொலிஸ் பரிசோதகர் வீட்டில் இல்லாத தருணத்தில் இந்த கொள்ளை சம்பவம் இடம்பெற்றுள்ள நிலையில், வீட்டில் இருந்த பொலிஸ் பரிசோதகரின் மனைவி கொள்ளையர்களால் தாக்கப்பட்டு காயம் அடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

சந்தேகநபர்கள் T56 துப்பாக்கியை கொண்டு வந்துள்ளனர்.

களுத்துறை உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் தலைமையில், வெலிப்பன்ன நிலைய பொறுப்பதிகாரி பொலிஸ் பரிசோதகர் ஆனந்த சில்வா, உட்பட பல பொலிஸ் குழுக்கள் சம்பவம் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

(ம-7)


## மணமகள் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பம், 1985 இல் பிறந்த நற்குணமுள்ள உத்திரட்டாதி நட்சத்திரம் 4 இல் (சூரியன், செவ்வாய்) கிரகபாவம் 19 1/2 உள்ள லண்டனில் வசிக்கும் பட்டதாரி மணமகனுக்கு தகுதியான மணமகள் தேவை.

**077 914 7318,**
**076 668 8199**(Viber)

(13660)

## SB Travels and Tours pvt ltd
## வேலையாட்கள் தேவை

யாழ்ப்பாணம் 198, கஸ்தூரியார் வீதியில் அமைந்துள்ள Travels இற்கு Air ticketing and system knowledge அனுபவமுள்ள பெண்கள் வேலைக்கு தேவை. அல்லது Training வழங்கப்படும்.

**075 808 3481**
**021 222 8555**
**sbtravels99@yahoo.com**

(C-5408)

## காணி விற்பனைக்கு

யாழ். கொக்குவிலில் 1.5 பரப்பு காணி புதிதாக நிர்மாணிக்கப்பட்ட சுற்று மதிலுடன் விற்பனைக்கு உண்டு.

**074 134 5805**

(13666)


# அந்தியேட்டி வீட்டுக் கிருத்திய அழைப்பு



கடந்த 05.11.2022 சனிக்கிழமை அன்று சிவபதம் அடைந்த
எமது குடும்பத் தலைவர்

அமரர்

## திரு. துரைச்சாமி வாமதேவன் (JP)

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் கடந்த 02.12.2022 வெள்ளிக்கிழமை கீரிமலை புனித தீர்த்தக்கரையில் நடைபெற்றது. வீட்டுக் கிருத்திய கிரியைகள் 04.12.2022 இன்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

(C-5409)

அராலி மத்தி,
வட்டுக்கோட்டை.

குடும்பத்தினர்

# மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 28 . 04 . 1947

மறைவு 04 . 12 . 2019

## அமரர் திருமதி கணபதிப்பிள்ளை கண்மணியம்மா

அம்மா!
அன்பு தெய்வத்தின்
ஆன்மா அகன்று
ஆண்டுகள் மூன்று ஆனதுவோ
ஆறவில்லை எம்மனம்
நேற்றுப் போல் உள்ளதம்மா
நீங்கள் ஊட்டிய அன்பால்
எம்மனம் புடம் போட்டதனால்
என்னவோ நின்மதி இன்றி
ஆறாத் துயரில் இருந்த போதும்
தலை நிமிர்ந்து நிற்கின்றோம்.
உங்கள் ஆத்மா சாந்தி
அடைய பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

(13653)


குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கைக்கு தொடர்ந்தும் அமெரிக்கா உதவும்

## அமெ.இராஜாங்க செயலாளர்

**(கொழும்பு)** **இலங்கை பொருளாதார நெருக்கடிகளில் இருந்து மீள்வதற்கு அமெரிக்கா உதவிகளை வழங்கும் என்று அமெரிக்க இராஜாங்க செயலாளர் அன்டனி பிளிங்கன் உறுதியளித்துள்ளார்.**



இலங்கையின் வெளி விவகார அமைச்சர் அலி சப்ரியை நேற்று முன் தினம் அமெரிக்க இராஜாங்க திணைக் களத்தில் சந்தித்த தருணத்தில் செய்தி யாளர் கள் மத்தியில் பிளிங்கன் இந்த தகவலை வெளியிட் டார்.

இலங்கை மற்றும் அமெரிக்காவுக்கு இடையிலான இராஜ தந்திர உறவு க்கு அடுத்த வருடத்துடன் 75 அகவை பூர்த்தியாகின்றது.

இந்தநிலையில் அமெரிக்கா- இலங் கைக்கு அன்பளிப்பு, கடன் மற்றும் ஏனைய உதவிகள் என்ற வகையில் 240 மில்லியன் டொலர்களை வழங்கியுள்ளது.

இந்த உதவி திட்டங்கள் தொடர்ந்தும் வழங்கப்படும் என்று பிளிங்கன் உறுதிய ளித்தார்.

தமது சந்திப்பின் போது, உலக காலநிலை விடயங்கள், அதில் இலங்கைக்கான திட் டங்கள் மற்றும் இலங்கையின் பொருளா தாரப் பிரச்சினைகள் குறித்து கலந்துரையாடியதாக பிளிங்கன் தெரி வித்தார்.

செய்தியாளர்களிடம் கருத்துரைத்த, வெளி விவ கார அமைச்சர் அலிசப்ரி, அமெரிக்காவின் உதவிக ளுக்கு நன்றி தெரிவித்தார்.

சர்வதேச நாணய நிதியத்துடனான உடன்பாடுகள், அதற்கான அமெரிக்கா வின் ஏற்பாடுகள் குறித்தும் அமைச்சர் அலிசப்ரி இலங்கை சார்பில் நன்றியை தெரிவித்தார். (4)

# ரயில் மோதி ஒருவர் பலி

(கொழும்பு)

கொழும்பில் இருந்து பதுளை நோக்கி நேற்று முன்தினம் இரவு பயணித்த புகையிரதத்தில் மோதி நபர் ஒருவர் உயிரிழந்துள்ளார் என பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்து ள்ளது.

பிலிமத்தலாவ, கங்கொட பகுதி யைச் சேர்ந்த 67 வயதுடைய நபரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.சடலம் தற்போது பேராதனை போதனா மருத்துவமனையில் வைக்கப்பட்டு ள்ளது.

சம்பவம் தொடர்பில் பேராதனை பொலிஸார் விசாரணைகளை மேற் கொண்டு வருகின்றனர். (4)


**கொள்கலன் தாங்கி விற்பனைக்கு**

வத்தளையில் பாவித்த கொள் கலன் தாங்கி விற்பனைக்கு உண்டு.

**076 690 8967**
**077 751 2299**

(சி-1871)



பால்நிலை வன்முறைக்கெதிரான 16 நாள் செயற்பாடு - 2022
16 Days of Activism against Gender Based Violence
(கார்த்திகை 25 முதல் மார்கழி 10 வரை)

"வன்முறைகளை சகித்துக் கொள்" என்ற வார்த்தையும் வன்முறைதான். தொடர்ந்தும் சமூக அணிதிரட்டலோடு வன்முறைக்கு எதிராக போராடுவோம்: குரல் கொடுப்போம்! அது நம் ஒவ்வொருவரினதும் தார்மீக கடமையும் பொறுப்பும் ஆகும்!!!"

யாழ் சமூக செயற்பாட்டு மையம் | Jaffna Social Action Center (JSAC)

(சி-5323)



உங்களது விவசாயம், கால்நடை வளர்ப்பு, கடற்றொழில் வியாபாரங்களை மேம்படுத்த மேலதிக நிதி வசதி தேவையா?

9% வ.வ.வீ.



*நிபந்தனைகளுக்கு உட்பட்டது

சௌபாக்கியா
கடன் திட்டம்

- உச்ச கடன்தொகை 25 மில்லியன் ரூபா
- மீளச்செலுத்தும் காலம் 05 ஆண்டுகள்
- ஒரு மில்லியன் ரூபாவிற்கு கீழான கடன்களுக்கு குறைந்த ஆவணங்கள்

மேலதிக விபரங்களுக்கு அழையுங்கள்
011 200 88 88

செலான் வங்கி

(C-1868)


# வேலணை பிரதேச சபை

## வேலணை பிரதேச சபையின் அதிகார எல்லைக்குட்பட்ட மீன் சந்தைகள், இறைச்சிக்கடைகள், சிற்றுண்டிச்சாலைகள், கடைகள், வாகனத்தரிப்பிடமும் மலசலகூடம் என்பவற்றை குத்தகைக்கு வழங்குவதற்கான மீள் கேள்வி அறிவித்தல் - 2023

வேலணை பிரதேச சபையின் அதிகார எல்லைக்குட்பட்ட மீன் சந்தைகள், இறைச்சிக்கடைகள், சிற்றுண்டிச்சாலைகள், கடைகள், வாகனத்தரிப்பிடமும் மலசலகூடமும் என்பவற்றை 01.01.2023 தொடக்கம் 31.12.2023 வரை குத்தகைக்கு வழங்குவதற்கான மீள் கேள்விகள் சபையால் கோரப்படுகின்றன.

கேள்விப்பத்திரம் வழங்கும் திகதி:- 05.12.2022 முதல் 19.12.2022 மதியம் 12.00 மணி வரை
கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும் திகதி:- 19.12.2022 பி.ப 01.30 மணி வரை
கேள்வி திறக்கும் திகதி:- 19.12.2022 பி.ப 02.00 மணி
மீளளிக்கப்படாத கேள்விப் படிவக்கட்டணம் ரூபா 2000.00

கேள்விப் படிவங்கள் இரு பிரதிகளில் தயாரித்து மூலப்பிரதியை **"தவிசாளர், பிரதேச சபை, வேலணை"** எனும் முகவரிக்கு அரக்கு முத்திரையிட்டு தபால் உறையின் இடது பக்க மேல் மூலையில் கேள்வியின் பெயர் தெளிவாக இடப்பட்டு பதிவுத்தபால் மூலம் அனுப்பப்படல் வேண்டும். அல்லது அலுவலகத்தில் அதற்கென வைக்கப்பட்டுள்ள கேள்விப்பெட்டியில் உரிய நேரத்திற்கு முன்னர் இடப்படல் வேண்டும். இரண்டாவது பிரதியில் **"பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், சிவன் பண்ணை வீதி, யாழ்ப்பாணம்"** என்ற முகவரிக்கு 19.12.2022 ம் திகதி பிற்பகல் 01.30 மணிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

மேலதிக விபரங்களை வேலணை பிரதேச சபையின் தலைமை அலுவலகம் மற்றும் உப அலுவலகங்களில் கட்மை நேரங்களில் பெற்றுக்கொள்ள முடியும் அல்லது 09.11.2022 ஆம் திகதிய வலம்புரி, தினக்குரல் பத்திரிகைளில் எமது கேள்வி அறிவித்தல் விளம்பரத்தில் பார்வையிடலாம்.

| தொ .இல | பெயர் | மாதாந்த வாடகை | மீளளிக்கப்படும் கேள்விவைப்புப் பணம் | 2023 ஏற்றுக்கொள்ளக் கூடிய ஆகக்குறைந்த தொகை |
|---|---|---|---|---|
| 1 | வேலணை செட்டிபுலம் மீன் சந்தை | ---------- | 5000.00 | 38,220.00 |
| 2 | சரவணை மீன் சந்தை | ---------- | 5000.00 | 8,880.00 |
| 3 | நயினாதீவு மீன் மரக்கறிச்சந்தை | ---------- | 5000.00 | 34,260.00 |
| 4 | மண்டைதீவு வாராந்த சந்தை | ---------- | 5000.00 | 10,400.00 |
| 5 | சாட்டி வாகனத்தரிப்பிடமும் மலசலகூடமும் உள்ளடங்கலான சுற்றுலாமையம் ( படகு சேவை தவிர்த்து) | ---------- | 5000.00 | 341,000.00 |
| | வேலணை துறையூர் மொத்த மீன் விற்பனைச் சந்தையும் சந்தையில் அமைந்துள்ள கடைகளும் | | | |
| 7 | வேலணை துறையூர் மீன் சந்தை | ---------- | 5000.00 | 198,000.00 |
| 8 | கடை இல - 03 சிற்றுண்டிச்சாலை | 1500.00 | 5000.00 | 120,880.00 |
| 9 | கடை இல - 04 | 1000.00 | 5000.00 | 31,290.00 |
| 10 | கடை இல - 05 | 1000.00 | 5000.00 | 34,650.00 |
| 11 | கடை இல - 06 கோழிக்கடை | 1000.00 | 5000.00 | 33,840.00 |
| | வேலணை பொதுச்சந்தை (6ம் வட்டாரம்) | | | |
| 12 | மீன் மரக்கறிச்சந்தை | ---------- | 5000.00 | 30,200.00 |
| 13 | சிற்றுண்டிச்சாலை | 1,750.00 | 5000.00 | 24,840.00 |
| 14 | கோழிக்கடை | 750.00 | 5000.00 | 207,450.00 |
| | புங்குடுதீவு முற்றவெளிச் சந்தையும் கடைத்தொகுதியும் | | | |
| 15 | கோழிக்கடை | 500.00 | 5000.00 | 153,450.00 |
| 16 | புங்குடுதீவு முற்றவெளி மீன் மரக்கறிச்சந்தை | ---------- | 5000.00 | 103,950.00 |
| | நயினாதீவு கடைத்தொகுதி | | | |
| 17 | கடை இல - 01 | 1000.00 | 10000.00 | 108,000.00 |
| 18 | கடை இல - 02 | 1000.00 | 10000.00 | 108,000.00 |
| 19 | கடை இல - 03 | 1000.00 | 10000.00 | 108,000.00 |
| 20 | கடை இல - 04 | 1000.00 | 10000.00 | 108,000.00 |
| 21 | கடை இல - 05 | 1000.00 | 10000.00 | 108,000.00 |
| 22 | கடை இல - 06 | 1100.00 | 11000.00 | 118,800.00 |
| 23 | கடை இல - 07 | 1100.00 | 11000.00 | 118,800.00 |
| 24 | கடை இல - 08 | 900.00 | 9000.00 | 97,200.00 |

திரு.[illegible]கரகுருமூர்த்தி,
தவிசாளர், வேலணை பிரதேச சபை.


04.12.2022

(சி-5406)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# 1 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 1935 – 08 – 17



மறைவு 2021 – 12 – 15

## அமரர். கணபதி சின்னத்தம்பி (சின்னத்துரை)

திதி: கார்த்திகை வளர்பிறை துவாதசி

ஆண்டு ஒன்று ஆனதையா
நீங்கள் எம்மை-விட்டுச் சென்று
நேற்றுப் போல் இருக்குதையா
உங்கள் நினைவுகள் தோற்றுப்போய்
நீங்கள் சென்ற தேசமதில் நிலையான
அமைதி கொள்ள
இறைவனை வேண்டுகின்றோம்.

(13664)

மனைவி சி.வள்ளி
பெ.தங்கவேலு
மல்லிகாதேவி குடும்பம்.

# மரண அறிவித்தல்

தோற்றம் 07 . 10 . 1938



மறைவு 03 . 12 . 2022

## நாகநாதர் பரமேஸ்வரன்

### (ஓய்வு பெற்ற புகையிரத நிலைய அதிபர்)

அளவெட்டியைப் பிறப்பிடமாகவும் மின்சார நிலைய வீதி யாழ்ப்பாணம் மற்றும் கொக்குவிலை வதிவிடமாகவும் கொண்ட நாகநாதர் பரமேஸ்வரன் அவர்கள் நேற்று (03.12.2022) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நாகநாதர் - லச்சுமி தம்பதியரின் ஏக புத்திரனும் மகாலஷ்சுமியின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற சிவபாக்கியத்தின் (இந்தியா) பாசமிகு சகோதரரும் ரவி(இந்தியா) அவர்களின் பாசமிகு மாமனாரும் தர்சிகாவின் பாசமிகு தந்தையும் நஜன் (ஆசிரியர் - யா/இந்து மகளிர் கல்லூரி) அவர்களின் அன்பு மாமனாரும் ஆரணி, ஹரிணி, லக்ஷன் ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (04.12.2022) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.150/2, லக்ஷ்மி இல்லம்,
குளப்பிட்டி சந்தி, K.K.S வீதி,
கொக்குவில். (13668) 021 205 2741

தகவல்:
குடும்பத்தினர்

# மரண அறிவித்தல்



## திருமதி பவளக்கொடி நாகநாதன்

மீசாலை வடக்கினை(புத்தூர் சந்தி) பிறப்பிடமாகவும் வசிப்பிட மாகவும் கொண்ட திருமதி பவளக்கொடி நாகநாதன் அவர்கள் நேற்று (03.12.2022) சனிக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லையா - சின்னத்தங்கம் தம்பதியினரின் புதல்வியும் நாகநாதன் (ஓய்வுபெற்ற வெளிக்கள உத்தியோகத்தர்) அவர்களின் பாசமிகு மனைவியும் காலஞ்சென்ற வேலுப்பிள்ளை - முத்துப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மருமகளும் குகதர்சினி (பிரான்ஸ்), காயத்திரி (நியூசிலாந்து) ஆகியோரின் அன்புத் தாயாரும் சிவகணேசன், டிபநீதன் ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆர்னா, வர்ஷன், கபிஷன் ஆகியோரின் அன்பு பேர்த்தியும் நேசம்மா, காலஞ்சென்ற சின்னத்துரை, காலஞ்சென்ற செல்வராசா (காந்தி), காலஞ்சென்ற காந்தியம்மா, சரஸ்வதி (திரவியம்) ஆகியோரின் பாசமிகு சகோதரியும் காலஞ்சென்ற நாகபூசணி, நாகேஸ்வரி ஆகியோரின் பாசமிகு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (04.12.2022) நண்பகல் 12 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பி.ப 1.30 மணியளவில் தகனக் கிரியைக்காக வேம்பிராய் இந்து மயானத்திற்கு எடுத்து செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மீசாலை வடக்கு,
கொடிகாமம். (C-5410) 076 358 1627

தகவல்:
குடும்பத்தினர்

# மரண அறிவித்தல்

பிறப்பு 03 . 08 . 1954



இறப்பு 01 . 12 . 2022

## திருமதி திலகவதி செல்வராசா

திருநெல்வேலி பத்திரகாளி கோவிலடியைப் பிறப்பிடமாகவும் நீர்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி திலகவதி செல்வராசா அவர்கள் கடந்த (01.12.2022) வியாழக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் - பராசக்தி தம்பதியினரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான பொன்னுத்துரை - தங்கம்மா தம்பதியினரின் ஆசை மருமகளும் செல்வராசா(துரை சுராஜ்) அவர்களின் அன்பு மனைவியும் பிரதீபா, சுரேஸ்குமார், விஜிதா, பகீரதி, இந்துகா, சிந்தியா ஆகியோரின் அன்புத் தாயாரும் ஜெயக்குமார், பிரவீனா, சசிகரன், மயூரன், டினேசன், சிவராஜ் ஆகியோரின் பாசமிகு மாமியாரும் அஜீன், சுபீன், மனுஷ்ரீ, சேரன், யுவன், நேத்ரா, ஷ்ருதி, ஆருதி, கிஷன், கிஷானா, கிரிஷ், கிஷாரா, கோஷிகன், நீரஜன், ஆதிரா, செழியன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் தணிகாசலம், தவராஜா, காலஞ்சென்ற கௌரிமனோகரி, சத்தியலிங்கம், நந்தகுமார், பத்மநிதி, கலாநிதி ஆகியோரின் பாசமிகு சகோதரியும் இராஜேஸ்வரி கமலநாயகி, தனபாலசிங்கம், கோணேஸ்வரி, காலஞ்சென்ற பாலசுப்பிரமணியம், இராஜேந்திரன் ஆகியோரின் அன்பு மைத்துனியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை 05.12.2022 திங்கட்கிழமை அன்னாரின் இல்லத்தில் காலை 10.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக நீர்வேலி சியாக்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நீர்வேலி சந்தி,
நீர்வேலி. (13670) 077 625 7948

தகவல்:
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# University of Jaffna

## Call for Expression of Interest

**Pre-qualifications of Firms to design, develop, install and maintain Electronic Medical Records (EMR) at the Family Health Centre, Department of Community & Family Medicine, Faculty of Medicine, University of Jaffna under the Global NIHR – AF Project.**

The Vice Chancellor, on behalf of the Consultancy Procurement Committee now invites companies/ firms for pre-qualification to design, develop, install and maintain Electronic Medical Records (EMR) system at the Family Health Centre, Department of Community & Family Medicine, Faculty of Medicine, University of Jaffna under the Global NIHR – AF Project.

1) The purpose of this project is to develop a scalable, secure, robust and responsive online system to streamline all activities of the Family Health Centre. The system should be flexible enough to adapt to evolving policy and administrative rules.

2) Scope of the services includes development of an Electronic Medical Records (EMR) system and providing training and support to manage the activities mentioned below:

- Record and store the personal details of the Patient, Doctors and other relevant staff.
- Patient visit tracking and appointment management
- Manage patient medical history
- Referral tracking
- Report generation

3) The interested companies/ firms having 5 years' experience in Electronic Medical Records (EMR) in the Sri Lankan health sector should submit Expression of Interest (EOI) in duplicate along with the following information in English stating the background of their organization and details of professional experts to be assigned for the service required.

a) Certificate of Registration of the firm as legal entity.
b) Registration of the firm with the relevant professional body (if any).
c) Documents to substantiate the forming of Joint Venture/ association (if any).
d) VAT registration certificate.
e) Audited statements of accounts and annual turnover for last three years.
f) List of similar system developments with contract amounts during last 5 years.
g) A certificate/ affidavit that the firm has not been blacklisted or debarred by any Government/ Semi-Government/ Autonomous/ International body.

4) Request for proposals (RFP) will only be issued to the shortlisted firms.

5) If you wish to obtain further detail about this EOI, please contact Mr.K.Thirukkumaran, Assistant Bursar, through the telephone Number 021 222 6519 or Mobile Number 077 309 5966.

6) The EOI's shall be submitted to Bursar-University of Jaffna, P.O Box 57, Thirunelvely, Jaffna by registered post or in person to reach his office on or before 2.00 pm on 16 December, 2022. For any clarification, you may contact Prof. R. Surenthirakumaran/Country Lead, Global NIHR AF Project, Faculty of Medicine, University of Jaffna. (T.P No: 077 744 8080 / Email- surenthirakumaran@gmail.com).

7) University of Jaffna will not reimburse any cost or expenses incurred in connection with preparation or delivery of EOI or visits to any office or site. (This notice is also available at University website www.jfn.ac.lk)

Vice Chancellor,

**University of Jaffna,**
**Post Box. 57,**
**Thirunelvely, Jaffna**
**Date: 04.12.2022**

(C-5305)

# University of Jaffna

## Call for Expression of Interest

**Pre-qualifications of bidder for Design & Print of Poster on Solid Waste Management**

The Vice Chancellor, on behalf of the Department Procurement Committee now invites companies/ firm/ professional for pre-qualification for Design and Print of posters for faculty of Engineering, University of Jaffna.

1) The purpose of this project is to design and print of posters in the context of Solid Waste Management Practices and a postgraduate programme which is going to be introduce very soon. The posters are to be designed on different themes relating to solid waste management practices, research and development on the same. This project is financed under ERASMUS-Plus Solid waste Management Project.

2) Scope of the work- The interested parties may express their interest in the following scope of the work (Design & printing of posters).

**Type 1: For School Children (High School)**
Poster 1A: Waste generation
Poster 1B: Solid Waste Management
Poster 1C: Contribution of a School Child

**Type 2: For University Students**
Poster 2A: Waste generation and management
Poster 2B: Waste Management in University Premises
Poster 2C: Research and Development in Waste Management
Poster 2D: Concept of Circular Economy and Six Sigma Principles

**Type 3: For Industrial Practitioners**
Poster 3A: Waste generation and management
Poster 3B: Waste Management in Institutional Premises
Poster 3C: Concept of Circular Economy and Six Sigma Principles
Poster 3D: Career Development and Continuous Development

3) The interested companies/ Firms having relevant experience should submit their EOI's in duplicate along with the following information in English stating the background of their organization and details of professional experts to be assigned for the service required.

a) Certificate of registration of the firm as legal entity (If any).
b) Registration of the firm with the relevant professional body (If any).
c) Documents to substance the forming of joint Venture/ association (If any).
d) VAT registration certificate (If any).
e) Audited statements of accounts and annual turnover for the last three years (If any).
f) List of similar design and printing works with contract amounts during last 5 years.
g) A certificate/ Affidavit that the firm has not been blacklisted or debarred by any government/semi-government/Autonomous/ International body.

4) Request for proposals (RFP) will only be issued to the shortlisted firms.

5) If you wish to obtain further detail about this EOI, please contact Mr. K. Thirukkumaran, Assistant Bursar, through the telephone Number 021 222 6519 or Mobile Number 077 309 5966.

6) The EOI's shall be submitted to Bursar, Finance Branch, University of Jaffna. (PO Box-57, Thirunelvely, Jaffna.) By post or in person to reach his office on or before 2.00 pm on December 16, 2022. For any further clarification, you may contact Dr.D.N.Subramanian, Co-ordinator of the ERASMUS-Plus Project through Email-daniel@eng.jfn.ac.lk.

7) University of Jaffna will not reimburse any cost or expenses incurred in connection with preparation or delivery of EOI or visits to any office or site. (This notice is also available at University website **www.jfn.ac.lk**)

**Vice Chancellor,**
**University of Jaffna,**
**Thirunelvely, Jaffna**
**Date: - 04.12.2022**

(C-5304)

# அரச ஊழியர்களின் சம்பளம் குறைக்கப்படமாட்டாது

## ரஞ்சித் சியாம்பலாப்பிட்டிய

(கொழும்பு)

எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அரசாங்க ஊழியர்களுக்காக வழங்கப்படும் சம்பளத்தை நிறுத்தப்போவதில்லை என நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய தெரிவித்துள்ளார்.

அரச ஊழியர்களின் சம்பளத்தைக் குறைக்காமல் அந்தச் சுமையை அரசு ஏற்றுள்ளதாக ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய செவ்வியின் போது இதனைத் தெரிவித்துள்ளார்.

தற்போது முன்வைக்கப்பட்டுள்ள வரவு-செலவுத் திட்டத்தில் மக்களுக்கு ஏதும் நிவாரணங்கள் வழங்கப்படவில்லை என்று விமர்சனங்கள் எழுந்துள்ளன.



இவ்வாறான குற்றச்சாட்டுக்கள் அரசியல் நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டு முன்வைக்கப்படுகின்றன. அடுத்த ஆண்டுக்கான அரசின் செலவு சுமார் 7,885 பில்லியன் ரூபாவாகும்.

அதில் 10 சதவீதம் சமூக நலத்துறைக்கும். இது கல்வி மற்றும் சுகாதாரத்திற்கான செலவினங்களைவிட அதிகமாகும். கல்வி மற்றும் சுகாதாரத்திற்கு 1,000 பில்லியன் ரூபாவுக்கு மேல் ஒதுக்கப்பட்டுள்ளது எனவும் தெரிவித்தார். (4)

# இரண்டு உரக் கப்பல்கள் நாட்டை வந்தடைந்தன

(கொழும்பு)

இலங்கை துறைமுகத்திற்கு இரண்டு கப்பல்கள் உரத்தை ஏற்றிக்கொண்டு வந்தடைந்ததாக விவசாய அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்துள்ளார். அதன்படி 41,678 மெற்றிக் தொன் MOP உரத்தை ஏற்றிக் கொண்டு கப்பல் ஒன்று நேற்று முன்தினம் வந்தடைந்துள்ளது. இதேவேளை மற்றுமொரு கப்பலும் 16,000 மெற்றிக் தொன் யூரியாவுடன் நேற்றுக் காலை வந்தடைந்துள்ளதாக அமைச்சர் குறிப்பிட்டுள்ளார். (4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### வடக்கு மாகாணத்தில்

# சுற்றுலா, கைத்தொழிலை விரிவுபடுத்த விசேட குழு

**(கொழும்பு)**

**வடக்கு மாகாணத்தை இலக்காகக் கொண்டு சுற்றுலாத்துறை சேவை கைத் தொழிலை விரிவுபடுத்த விசேட கவனம் செலுத்தப்பட்டுள்ளது என சுற்றுலாத்துறை மற்றும் காணி விவகாரங்கள் அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ தெரிவித்தார்.**

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இடம்பெற்ற 2023 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தில் சுற்றுலாத்துறை, சுற்றாடல் துறை மற்றும் வனஜீவராசிகள் ஆகிய அமைச்சுக்கள் மீதான குழுநிலை விவாதத்தில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிட்டதாவது,

வடக்கு மாகாணத்தில் சுற்றுலாத்துறை சேவை கைத்தொழிலை மேம்படுத்த விசேட குழு நியமிக்கப்பட்டுள்ளது. இந்த குழுவில் வடக்கு மாகாணத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் ஆளும் மற்றும் எதிர்க்கட்சிகளின் உறுப்பினர்கள் கலந்து கொள்ளலாம் ஆலோசனைகளை முன் வைக்கலாம்.

யாழ்.பலாலி விமான நிலையத்துக்கான "லயன் எயார்" விமான சேவை எதிர்வரும் 12 ஆம் திகதி முதல் ஆரம்ப மாகும்.

வடக்கு மாகாணத்தில் சுற்றுலாத்துறை சேவையை மேம்படுத்துவது பிரதான எதிர்பார்ப்பாக உள்ளது. சுற்றுலாத்துறை



சேவை கைத்தொழில் மேம்பாட்டுக்கு அனைவரது ஒத்துழைப்பையும் எதிர்பார்க்கிறோம் என தெரிவித்தார். (4)

# குப்பைகள் கொட்டுவதை கண்காணிக்க கமரா

**வலி.தென்மேற்கு பிரதேச சபை நடவடிக்கை**

(அராலி)

மாநகர சபையினர் கல்லுண்டாய் பகுதியில் குப்பைகளை கொட்ட வரும்போது மேற்கொள்ளப்படும் முறைகேடான செயற்பாடுகளை கண்காணிப்பதற்கும் அவற்றினைத் தடுப்பதற்கும் கல்லுண்டாய் வீதிக்கு சி.சி.டி.வி கமரா பொருத்துவதாக வலி. தென்மேற்கு பிரதேச சபையின் தவிசாளர் அ.ஜெபநேசன் தெரிவித்துள்ளார்.

ரூபாய் 10 இலட்சம் நிதிஒதுக்கீட்டில் இந்தக் கமராக்களை பொருத்தவுள்ளதாக அவர் அப்பகுதி மக்களுக்கு உத்தரவாதமளித்தார்.

யாழ்.மாநகர சபையினர், கல்லுண்டாய் பகுதியில் குப்பைகளைக் கொட்டுவதற்கு எதிராக கடந்த சில தினங்களாக கவனயீர்ப்புப் போராட்டத்தினை முன்னெடுத்தனர்.

இந்நிலையில் போராட்டத்தினை முடிவுக்குக் கொண்டுவரும் போது அவர் இந்த விடயத்தினை அப்பகுதி மக்களுக்கு கூறினார். (4-104)

# உறவுகளிடம் விசாரணை

(கண்டாவளை)

காணாமல் போன ஆட்கள் பற்றிய அலுவலகத்தினர் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்களிடம் நேற்று கிளிநொச்சியில் விசாரணைகளை மேற்கொண்டிருந்தனர்.

கிளிநொச்சி மாவட்ட செயலக திறன் விருத்தி பயிற்சி நிலையத்தில் குறித்த விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டன. இன்றும் விசாரணைகள் மேற்கொள்ளப்படவுள்ளன. (4-315)

# சட்டவிரோத மீன்பிடியை கட்டுப்படுத்த நடவடிக்கை

(அராலி)

வடமராட்சி கிழக்கு மருதங்கேணி கட்டைக்காடு கடற்பரப்பில் சிறிய கண் வலைகளைப் பயன்படுத்தி மின் ஒளி பாய்ச்சி மீன் பிடிக்கும் செயற்பாடுகளை கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

நீண்டகாலமாக தமது பகுதி கடற்பரப்பில் குறித்த கடற்றொழில் நடவடிக்கையை சில தொழிலாளர்கள் முன்னெடுத்து வருவதால் தமது தொழில் நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டு வருவதாக சுட்டிக்காட்டி வரும் கடற்றொழில் சங்கங்கள் அதனை தடை செய்யுமாறு வலியுறுத்தி வந்திருந்ததுடன் இவ்விடயம் தொடர்பில் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் கவனத்துக்கும் கொண்டு சென்றிருந்தனர்.

இந்நிலையில் துறைசார் அதிகாரிகள் மற்றும் கடற்படை அதிகாரிகள், கடற்றொழிலாளர்கள் ஒன்றிணைந்து நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை கலந்துரையாடலொன்றை மேற்கொண்டிருந்தனர். குறித்த கலந்துரையாடலில், ஒளிபாய்ச்சி சிறிய கண் வலைகளைப் பயன்படுத்தி முன்னெடுக்கப்படும் தொழில் நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்த துறைசார் அதிகாரிகள் மற்றும் கடற்படையினர் இணக்கம் தெரிவித்துள்ளனர்.

இதனையடுத்து நேற்று முன்தினம் முதல் குறித்த தொழில் நடவடிக்கைகள் தடை செய்யப்படுவதுடன் அதனை மீறி தொழில் நடவடிக்கைகளில் ஈடுபடும் தொழிலாளர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அதிகாரிகள் மட்ட கூட்டத்தில் அறிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (4-104)

# கனடா விபத்தில் தாயாரும் உயிரிழப்பு



(யாழ்ப்பாணம்)

கடந்த ஒக்டோபர் மாதம் கனடா - மார்க்கம் நகரில் நிகழ்ந்த வீதி விபத்தில் சிக்கிய யாழ்ப்பாணம் இணுவிலை பின்புலமாகக் கொண்ட குடும்பத்தில் காயமடைந்து சிகிச்சை பெற்று வந்த 52 வயதான தாயாரும் உயிரிழந்துள்ளதாகக் கூறப்படுகின்றது.

அன்றையதினம் இடம்பெற்ற விபத்தில் மகன் மற்றும் மகள் ஸ்தலத்தில் உயிரிழந்த நிலையில் காயமடைந்த தாயார் அதி தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டிருந்தார்.

இந்நிலையில் குறித்த பெண் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளதாகக் கூறப்படுகின்றது. (4-60)

# வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேசசபை பாதீடு வெற்றி

(கரணவாய்)

வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச பாதீடு 19 வாக்குகளினால் வெற்றி பெற்றுள்ளது. நேற்று முன்தினம் உப தவிசாளர் கந்தர் பொன்னையா தலைமையில் பிரதேச சபை மண்டபத்தில் கூட்டம் ஆரம்பமானது.

31 உறுப்பினர்களில் 25 பேர் கூட்டத்துக்கு வருகை தந்திருந்தார்கள். வரவு-செலவு திட்டத்துக்கு 22 பேர் ஆதரவாகவும் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியைச் சேர்ந்த மூன்று பேர் எதிராகவும் வாக்களித்தார்கள். இதனால் 19 மேலதிக வாக்குகளினால் வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபையின் பாதீடு வெற்றி பெற்றது. (4-60)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 200 | 200 | 200 | 200 |
| உருளைக்கிழங்கு | 180 | 190 | 200 | 200 |
| பச்சைமிளகாய் | 160 | 200 | 180 | 200 |
| தக்காளி | 200 | 220 | 280 | 250 |
| மரவள்ளிக்கிழங்கு | 150 | 150 | 180 | 150 |
| கோவா | 250 | 220 | 280 | 300 |
| கரட் | 300 | 480 | 420 | 450 |
| பூசணி | 100 | 150 | 100 | 140 |
| புடோல் | 250 | 280 | 160 | 240 |
| வாழைக்காய் | 120 | 120 | 120 | 120 |
| சின்ன வெங்காயம் | 650 | 600 | 650 | 700 |
| பெரிய வெங்காயம் | 300 | 200 | 200 | 250 |
| பாகற்காய் | 450 | 450 | 400 | 600 |
| வெண்டக்காய் | 120 | 100 | 120 | 200 |
| கருணைக் கிழங்கு | 100 | 100 | 120 | 150 |
| பயற்றங்காய் | 250 | 200 | 240 | 300 |
| லீக்ஸ் | 350 | 380 | 450 | 480 |
| பீற்றூட் | 400 | 300 | 400 | 450 |
| கறிமிளகாய் | 600 | 800 | 750 | 800 |
| முருங்கைக்காய் | 800 | 700 | 650 | 800 |
| போஞ்சி | 200 | 200 | 250 | 250 |
| கத்தரிதம்புள்ள | 180 | 150 | -- | 200 |
| கீரை - 1 பிடி | 180 | 160 | 180 | 240 |
| தேசிக்காய் | 300 | 200 | 200 | 200 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 90 | 60 | 70-90 |
| இராசவள்ளி | 250 | 300 | 240 | 280 |
| வெங்காயப்பூ | -- | 400 | 400 | -- |
| முள்ளங்கி | 200 | 200 | 150 | 320 |
| பொன்னாங்காணி | 100 | 120 | 100 | 80 |
| வல்லாரை | 50 | 40 | 45 | 40 |
| ஈரப்பலா | 100 | 150 | 120 | 180 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வலம்புரியின் வாரமலர்
சங்குநாதம்
நாதம் 373
Viber 076 636 3378






# இனவாதத்தைக் கக்குவது இனப்பிரச்சினைக்கு தீர்வாகாது

**தமிழினத்திற்கான தீர்வை வழங்குவதற்கு சிங்கள ஆட்சியாளர்கள் எவரேனும் முன்வந்தால் அதைக் குழப்புவதற்காக சில சிங்கள அரசியல்வாதிகள் இன வாதத்தைத் தூண்டும் பேச்சுக்களை பேச ஆரம்பித்து விடுகின்றனர்.**







**- அபிமன்யு**

இனப் பிரச்சினைக்கான தீர்வு தொடர்பில் ஆட்சியாளர்கள் சிந்திக்கத் தொடங்கி விட்டனர்.

அவ்வாறு சிந்தித்தால் மட்டும் போதாது மாறாக அவர்களால் முன்வைக்கப்படுகின்ற தீர்வு நடைமுறைக்கு வரவேண்டும்.

நடைமுறைக்கு வரும் தீர்வு தமிழினத்தின் அபிலாசைகளை தீர்க்கவல்ல தீர்வாக அமைய வேண்டும்.

அவ்வாறு இருந்தால் மாத்திரமே இந்த நாட்டில் அமைதி நிலவும். அத்துடன் நாடு முன்னேறும் என்பதை நாம் ஒவ்வொருவரும் மனதில் வைத்திருக்க வேண்டும்.

இங்குதான் சிக்கல் எழும் நிலைகள் காணப்படுகின்றன.

சுதந்திரத்திற்குப் பின்னான பேரினவாத ஆட்சியாளர்களின் இன-மத துவேசத்துக்குள் புதையுண்டு கிடக்கும் சிங்கள மக்கள் அவ்வளது சீக்கிரத்தில் மனம் மாறி விடுவார்கள் என்று நம்பிவிட முடியாது.

ஏனெனில் சிங்கள மக்கள் மனங்களில் தமிழினம் தொடர்பில் அவ்வளவுக்கு வன்மத்தை விதைத்திருக்கிறார்கள் சிங்கள பேரினவாத அரசியல்வாதிகள் என்பதே உண்மையானது.

சிறுபான்மைத் தமிழினத்திற்கு ஒரு தீர்வுத்திட்டம் வருகிறது எனின் அந்தத் தீர்வுத் திட்டம் எவ்வாறானது என்பதை முதலில் தெளிவுபடுத்த வேண்டியது பெரும்பான்மை ஆட்சியாளர்களின் பொறுப்பு.

இதோ தமிழர் பிரச்சினையைத் தீர்க்கின்றோம் என ஆட்சி பீடம் ஏறியவர்கள் அதன் பின் அது பற்றிப் பேசாமல் சிங்கள மக்களுக்கு பிடித்த அரசியல் தலைவர்களாய் இருந்ததே இலங்கைத் திருநாட்டின் வரலாறு.

அது இன்றுவரை தொடரவே செய்கிறது என்பதுதான் வேதனை. தற்போது கூட தமிழினத்திற்கான தீர்வை வழங்க நான் தயார் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பாராளுமன்றில் பேசியிருந்ததும் அதிகாரப் பரவலாக்கம் தொடர்பில் சர்வகட்சி. கூட்டம் நடத்தப்படும் எனவும் தெரிவித்திருந்தார்.

நிலை இவ்வாறு இருக்கையில் தமிழ்த் தேசியக்கூட்டமைப்பினர் மூன்று நிபந்தனைகளை முன்வைத்து இவை அதிகாரப் பகிர்வில் உள்ளடக்கப்படவேண்டும் என்ற நிபந்தனையை முன்வைத்துள்ளனர்.

இதற்குப் பதிலளித்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பேச்சு மேசைக்கு வருவதற்கு முன்னர் நிபந்தனைகளை விதிக்க வேண்டாம்.

முதலில் பேச்சு மேசைக்கு வாருங்கள் அனைத்தையும் பேசித் தீர்த்துக் கொள்ளுவோம் என தமிழ்த் தேசியக் கட்சிகளிடம் வேண்டுகோள் விடுத்திருந்தார்.

இங்குதான் நாம் ஒரு விடயத்தை நினைவுபடுத்த வேண்டியுள்ளது.

காலம் காலமாக ஆட்சிக்கு வரும் பேரினவாத அரசியல் தலைவர்கள் சிறுபான்மைத் தமிழினத்துக்கான தீர்வைத் தருகிறோம் என்ற வாக்குறுதியை தமிழ்த் தலைமைகளிடம் வழங்குகின்றார்கள்.

ஆனால் அவர்கள் ஆட்சிபீடம் ஏறியவுடன் அந்த வாக்குறுதிகள் அனைத்தும் காற்றோடு கரைந்து போகும் கற்பூரமாய் போவது தான் வரலாறு.

அவ்வாறான ஏமாற்றங்களை பல தடவைகள் கண்டு நொந்து போன தமிழினமும் தமிழ் தலைவர்களும் பேரினவாத அரச தலைவர்களின் மாயப் பேச்சை நம்புவதற்கு தயாராக இல்லை என்பதுதான் நிதர்சனமானது.

முதலில் தமிழினத்துக்கு வழங்கப்படும் தீர்வுத்திட்டம் என்ன என்பதை தெளிவுபடுத்துங்கள்.

அந்த தீர்வுத் திட்டத்தை சிங்கள மக்களை ஏற்றுக் கொள்ள வையுங்கள். அவ்வாறு சிங்கள மக்கள் ஏற்றுக் கொள்ளும் தீர்வுத் திட்டத்தில் தமிழினத்தின் அபிலாசைகள் அடங்கியிருக்குமாக இருந்தால் நிச்சயம் அதனைத் தமிழினம் ஏற்றுக் கொள்ளும்.

இதைவிடுத்து பழைய குருடி கதவைத்திறவடி என்ற கதைக்கு இனி இடமிருக்கக்கூடாது என்பதே தமிழினத்தின் விருப்பமும் கூட.

ஏனென்றால் தமிழினம் தொடர்பான வன்மப்பேச்சுக்களையும் தமிழினத்துக்கான தீர்வை ஒரு போதும் வழங்கி விடக்கூடாது என்பதிலும் சிங்கள அரசியல்வாதிகளில் சிலர் வன்மத்தை இன்றுவரை கக்கிக்கொண்டுதான் இருக்கிறார்கள்.

நடந்து முடிந்த மாவீரர் நாளை தமிழ் மக்கள் நினைகூர தற்போதைய ரணில் அரசாங்கம் அனுமதித்திருந்தாலும் அதற்கு பாதுகாப்புத் தரப்புகளிடமிருந்து பாரிய எதிர்ப்புடன் கூடிய அழுத்தம் இருக்கவே செய்தது.

தவிர சரத்வீரசேகர போன்ற இனத்துவேசத்தைத் தூண்டும் அரசியல்வாதிகள் அதற்கு பெரும் எதிர்ப்பை தெரிவிக்கவே செய்கின்றனர்.

நடந்து முடிந்த மாவீரர் நாளிற்கு அரசு தடைவிதிக்காத போதிலும் சரத்வீரசேகர விசமத்தனமான பேச்சை பேசிவருகிறார்.

பயங்கரவாதிகள் கொலைகாரர்கள். அவர்களை நினைவுகூர அனுமதி இல்லை.

யுத்தத்தில் உயிரிழந்தவர்களை தமிழர்கள் தமது வீடுகளில் இருந்து நினைகூரலாம்.

சமஸ்ரி என்று நாட்டைப் பிரித்தால் பௌத்தத்தைக் காப்பாற்ற முடியாது என்றவாறு அவர் பேசிய பேச்சு இனமத துவேசத்தை தூண்டும் பேச்சாக அமைந்துள்ளது.

பயங்கரவாதிகள் என்று உங்களால் முத்திரை குத்தப்பட்டவர்களின் உறவுகள் இந்த மண்ணில் தான் வாழ்கிறார்கள் என்பது ஏன் உங்களுக்குப் புரியவில்லை.

யுத்தத்தில் உயிரிழந்தவர்களை வீட்டில் இருந்து நினைவுகூருங்கள் எனின் எமது ஒன்றுகூடும் சுதந்திரத்தை தட்டிப்பறிக்கிறீர்கள் என்பது தானே பொருள். சமஸ்ரி என்று நாடு பிரிந்தால் பௌத்தம் அழிந்து போகும் என சிங்கள மக்களின் மனங்களில் மத வன்மத்தைத் தூண்டிப்பார்ப்பது எந்த வகையில் நியாயமானது.

நாம் அனைவரும் மிக அவதானமாக செயற்பட வேண்டிய நேரம் இதுதான்.

நிபந்தனை விதிக்காமல் பேச்சுக்கு வாருங்கள் என்கிறது ஆளும் அரசாங்கம்.

அதிகாரப்பகிர்வை தமிழினத்துக்கு வழங்கினால் நாடு இரண்டாகும். மீண்டும் பயங்கரவாதம் தலைதூக்கும் என்கிறார்கள் சரத் வீரசேகர போன்ற இனவாதிகள்.

இந்த இடத்தில் தமிழ் அரசியல் தலைவர்கள் அனைவரும் ஒன்றாய் ஒற்றுமையாய் தமிழினத்திற்கான தீர்வை ஆணித்தரமாய் ஒன்றிணைந்து கூறுவோமாக இருந்தால் எமக்கான தீர்வு கிடைக்க வாய்ப்புக்கள் அதிகம்.

நாம் பிரிந்து நிற்போமாக இருந்தால் அது பேரினவாத அரசுகளுக்கு நாம் வழங்கும் வாய்ப்புக்காளாகவே அமையும் என்பதை நாம் மறந்து விடக் கூடாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலடி மாநாடு



## உலகம் முழுவதும் எங்கள் தமிழர் கோலோச்சுவர்

**வா**த்தியார் வைத்திலிங்கம் தலைமையில் ஆலடி மாநாடு கூடியது. மாநாட்டு உறுப்பினர்கள் அனைவரும் ஆலடிக்கு வந்திருந்தனர்.

இறைவணக்கத்துடன் ஆலடி மாநாட்டை ஆரம்பிப்பம் என்று வாத்தியார் கூற, அனைவரும் எழுந்து நின்று இறை வணக்கம் செலுத்தி அமர்ந்தனர்.

தொடர்ந்து பண்டிதர் பரமலிங்கம் எழுந்தார். தெல்லிப்பழை புற்று நோய் வைத்தியசாலையில் புற்று நோயாளர்களுக்குத் தேவையான மருந்துகளுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாகக் கடந்த மாதம் 19 ஆம் திகதி வலம்புரி நாளிதழில் ஆசிரியர் தலையங்கம் எழுதப்பட்டிருந்தது.

இதனைப் பார்த்த பலரும் வைத்தியசாலை நிர்வாகத்துடன் தொடர்பு கொண்டு உதவுவதற்கு முன்வந்தனர் என்ற செய்தியறிந்து மிகுந்த மன நிறைவடைகின்றோம்.

அதிலும் குறிப்பாக, தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரமம் 8 இலட்சம் ரூபாய் பெறுமதியான மருந்துப் பொருட்களை கடந்த 30 ஆம் திகதி வைத்தியசாலை நிர்வாகத்திடம் வழங்கியுள்ளது.

இது கண்டு நாம் மிகுந்த மகிழ்ச்சியடைந்துள்ளோம்.

ஈகையும் அறமும் தழைத்தோங்கும் எங்கள் யாழ்ப்பாண மண்ணில் வாழுகின்ற கொடையாளர்கள்-தர்மவான்கள், புலம்பெயர் உறவுகள் மற்றும் சேவைக்கென்றே தம்மை அர்ப்பணித்துள்ள அறக்கட்டளை அமைப்புகள், ஆச்சிரமங்கள் இருக்கும் வரை இந்த மண்ணில மனிதம் வாழும் என்பதில் ஐயமேதுமில்லை.

இவ்வாறு கூறிய பண்டிதர் பரமலிங்கம் நெகிழ்ந்து போனார்.

தொடர்ந்து ஆலடியில் சிறிது நேரம் மௌனம் நிலவியது. மௌனத்தைக் கலைக்க விதானையார் விசுவலிங்கம் குரல் கொடுத்தார்.

**விதானையார்:** பண்டிதர் ஐயா கூறிய அத்தனையும் உண்மை. சிவபூமி அறக்கட்டளை நிறுவனம் வடமாகாணம் என்ற எல்லை கடந்து கிழக்கு மாகாணம், மலையகம் என நாடளாவிய ரீதியில் தனது உதவிக் கரத்தை நீட்டியுள்ளது.

இதுபோல எந்நாளும் அன்னமிட்டு ஆதரிக்கும் சந்நிதியான் ஆச்சிரமத்தின் அரும்பணி அளவிடற்கரியது.

இதுபோல இன்னும் பல அமைப்புகளும் தனிநபர்களும் குடும்பங்களும் செய்கின்ற தர்மத்தை ஒருபோதும் நாம் மறந்துவிட முடியாது.

அண்மையில் வியட்நாம் முகாமில் உயிரிழந்த சாவகச்சேரியைச் சேர்ந்த குடும்பஸ்தரின் உடலை இங்கு கொண்டு வந்து சேர்ப்பதற்குப் புலம்பெயர் தமிழ் அமைப்புகள், முன்வந்திருந்த செய்தியறிந்து என் கன்னத்தின் ஓரங்கள் நனைந்து விட்டன.

எத்துணை இரக்கம், எத்துணை அன்பு. இந்தப் பரோபகாரம் இருக்கும் வரை தமிழன் உலகம் முழுவதும் கோலோச்சுவான். இது சத்தியம். விதானையார் விசுவலிங்கம் திரிகரண சுத்தியோடு கூறினார்.

விதானையாரின் உணர்வுபூர்வமான கருத்து ஆலடியில இருந்தவர்களை நெகிழவும் அழவும் வைத்தது. அதன் அறிகுறியாக ஆலடியில் மௌனம் நிலைத்தது.

மௌனத்தைச் சாத்திரியார் சதாசிவம் ஊடறுத்தார்.

**சாத்திரியார்:** நான் ஒரு கதை சொல்லப் போறன். மூன்று தலைவர்கள் திருப்பதிக்குச் சென்று வழிபட்டனர்.

திருப்பதிக்கு முதலில் சென்றவர் ஆட்சிப்பீடமேறினார். அதன்வழி சிறுபான்மை மக்களைக் கொன்று குவித்தார்.

அனைத்தும் யாமே என்று ஆணவம் கொண்டார். அடுத்த முறை திருப்பதி சென்றார்.

அகந்தை அறுக்கும் வெங்கடாசலபதி; பொது மக்களைக் கொண்டு அவரின் பதவியைப் பறித்தார்.

இன்னொருவர் ஜனாதிபதியாகப் பதவியேற்று திருப்பதி சென்றார். மூலவரை அவர் வழிபடுவதற்காகக் கதவைத் திறக்க முற்பட்டபோது திருப்பதியானின் திறப்பு உடைந்து போனது.

இவர் எதுவும் செய்ய மாட்டார். இவரின் அசமந்தம் வழிபாட்டுத் தலத்தில் குண்டு வெடித்து அருமந்த உயிர்கள் பலியாகும் என்ற உண்மை அதன்மூலம் உணர்த்தப்பட்டது.

மூன்றாமவர் திருப்பதி சென்றார். தனது நிறையளவில் தங்கம் கொடுத்தார்.

தேர்தலில் அவரது கட்சி தோல்வி கண்டது. அனைத்து வாக்குகளையும் கூட்டியதில் ஒற்றை ஆசனம் மட்டுமே அவருக்குக் கிடைத்தது.

ஆனாலும் அந்த ஒற்றை எம்.பி ஜனாதிபதி ஆசனத்தில் அமர்ந்து கொண்டார்.

அவர் மீதான அவதானத்தை வெங்கடாசலபதி உன்னிப்பாய்க் கவனிக்கின்றார்.

அது தெரிந்தோ என்னவோ இனப் பிரச்சினையைத் தீர்ப்பேன். இலங்கையில் இந்து மதத்தின் தனித்துவம் பாதுகாக்கப்பட வேண்டும் எனப் பெரிய பெரிய வார்த்தைகளைக் கூறி வருகின்றார்.

சாத்திரியார் கூறிய கதை ஆலடியில இருந்த அனைவராலும் உன்னிப்பாகக் கவனிக்கப்பட்டது.

**விதானையார்:** அப்ப சாத்திரியாரின் கருத்துப்படி இனப் பிரச்சினைக்குத் தீர்வு கிடைக்கும் எண்டு நாங்கள் நம்பலாம் போல...

**சாத்திரியார்:** அரசாங்கம் தீர்வுதர மறுத்தால், அந்தத் தீர்வை இயற்கை நமக்குத் தரும். சிலவேளை நாடு முழுவதும் நம் தமிழர் கையில் வந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

**பண்டிதர்:** அதுசரி சாத்திரியார் இந்து மதத்தின்ர தனித்துவத்தைப் பேண வேணும் எண்டு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கூறியது ஆழ்மனதில் இருந்தோ அல்லது நுனி நாக்கில் இருந்தோ.

**சாத்திரியார்:** திருக்கேதீச்சரத்தானுக்கு மஹாகும்பாபிஷேகம் நடந்த பின்னர் தானே நாட்டில பெரு மாற்றம் ஏற்பட்டது. அதோட ஜனாதிபதி மாளிகையில நந்திக் கொடியும் ஏற்றப்பட்டதல்லோ.

இதுகளைப் பார்க்கும் போது மீளவும் இலங்கை சிவபூமி என்ற தகைமையைப் பெறும் எண்டு தான் நான் நம்புகிறன்.

இவ்வாறு சாத்திரியார் கூற, அதனைத் தானும் ஆமோதிப்பது போல ஆலடிப் பிள்ளையார் கோவில் கண்டாமணியும் ஒலிக்க, ஆலடியில் இருந்தவர்கள் எழுந்து கோவிலுக்குச் சென்றனர்.

ஆதித்தன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



காலப்போக்கில் காயங்கள் ஆறிவிடும் என்பது ஆறுதல் வார்த்தைகள் மட்டுமா வியாசரே?







சொந்தங்கள் சூழ வாழ்வது சொர்க்க மானது தானே வியாசரே?

**தருஷ் — வதிரி**

**ஆண்களை விட பெண்களுக்கு பொறாமை அதிகமாமே வியாசரே உண்மையா?**

பெண்களுக்கு தன்னைவிட வேறு ஒரு பெண்ணின் தலைமுடி நீளமாக இருந்தால் பொறாமை வரும்.
ஆனால் ஆண்களுக்கு இன்னொரு ஆணுக்கு முடி இருந்தாலே பொறாமை வந்து விடும்.
என்ன செய்வது தலைமுடி விடயத்தில் பெண்களைவிட ஆண்கள் அதிகம் பொறாமை கொள்ளத்தான் செய்கின்றார்கள்.

**சபேஸ் — மந்துவில்**

**மழைக்காலம் என்றால் நுளம்புத் தொல்லை தாங்க முடியவில்லை வியாசரே என்னா கடி கடிக்கிறது?**

மழை காலத்தில் நுளம்புகளிடத்தே மிக மிக அவதானமாக இருக்க வேண்டும்.
டெங்கு நோய் வடக்கில் மிகத் தீவிரமாகப் பரவி வருகிறது. ஆதலால் எமது சூழலை சுத்தமாய் வைத்திருக்க வேண்டியது எமது கடமை.
அதுசரி நுளம்பிற்கு நன்றாக கண்தெரியும் போல இருக்கிறது. நிம்மதியாக தூங்கும் போது சரியாக காதுக்கு பக்கத்தில் வந்து இரைகிறதே.

**இதழினி — புலோலி**

**காலப்போக்கில் காயங்கள் ஆறிவிடும் என்பது ஆறுதல் வார்த்தைகள் மட்டுமா வியாசரே?**

மனிதனுக்கு கடவுளால் வழங்கப்பட்ட அருமருந்து மறதி. இந்த மறதி மட்டும் மனிதனிடத்தே இல்லையென்றால் இந்த உலகில் கல்லறைகள் தான் மிஞ்சியிருக்கும்.
காலப்போக்கில் ஆறுவது தானே காயம்.
காயங்கள் ஆறிய போதும் அதன் தழும்புகள் அப்படியே இருக்கவே செய்கின்றன.
அதுபோலத்தான் நினைவுகளும் அப்பப்போ கடந்த காலத்தை நோக்கி சிறகடித்துப் பறக்கவே செய்கிறது.

**மதுவன் — மீசாலை**

**பணம் பந்தியில் குணம் குப்பையில் என்ற தத்துவம் பற்றிக் கூறுங்களேன் வியாசரே?**

ஆமையும் முயலும் ஓட்டப்பந்தயம் நடத்தியது போலத்தான் இதுவும்.
பணம் முயல் போல வேகமாக ஓடலாம். ஆனால் குணம் என்ற ஆமைதான் வெற்றி பெறும். இதுவே வரலாறு இதுவே இறைவன் தீர்ப்பு. இறைவனுக்கு பணத்தை கொட்டுபவர்களை விட நல்ல குணத்தை உடையவர்களையே நன்றாகப் பிடிக்கும்.

**அன்பு வாசகர்களே!**
**உங்கள் எண்ணத்தில் தோன்றிய கேள்விகளை**
**076 097 3126**
**என்ற இலக்கத்திற்கு SMS செய்யுங்கள்**

**நரேன் — யாழ்ப்பாணம்**

**சொந்தங்கள் சூழ வாழ்வது சொர்க்கமானது தானே வியாசரே?**

எப்போதும் எமக்கருகே சொந்தங்கள் இருப்பது மிகப் பெரும் பலம் என்றே கூறலாம்.
எமக்கு சந்தோசம் மிகுதியாக இருக்கும் போது சொந்தத்தின் அருமை தெரிந்திடாது.
துக்கத்தில் நாம் வாடும் போது அழுவதற்கு தோள் கொடுக்கும் சொந்தங்களை ஒரு போதும் இழந்து விடக் கூடாது.
தொலைபேசி என்ற ஒன்று வந்தது அயல் வீட்டையும் தொலை தூரமாக்கி விட்டது.
வேலிகள் போய் மதில் கலாச்சாரம் வந்தது கடப்பு கடந்து சென்று பலகாரம் பரிமாறும் கலாசாரத்திற்கு பாடை கட்டி விட்டது.
பேஸ்புக் என்ற கொடுமை வந்தது RIP யுடன் முடிந்து போனது அடுத்த வீட்டின் துக்கம்.

**சுதன் — குப்பிழான்**

**தமிழர் பிரச்சினை தொடர்பில் தமிழ் கட்சிகளிடம் கேட்டு காலத்தை வீணடிப்பதை விட தமிழர் பிரதேசங்களில் பொது வாக்கெடுப்பு நடத்தினால் என்ன?**

நல்லது தான் ஆனால் அதை நடைமுறைப்படுத்துவது யார்? நாம் யாரையெல்லாம் எமக்கான தலைவர்கள் என்று நினைத்துக் கொண்டிருக்கின்றோமோ அவர்கள் மிகப் பயங்கரமான சுயநலவாதிகள் என்பதை நாம் முதலில் புரிந்து கொள்ள வேண்டும்.
தமிழர்களின் விருப்பப்படி தமிழினத்திற்கான தீர்வு கிடைக்க வேண்டும்.
அதில் எந்த மாற்றுக் கருத்துக்கும் இடமில்லை.

**தயாபரன் — ஒட்டுசுட்டான்**

**அரச உத்தியோகத்தர்கள் 55 வயதில் ஓய்வு பெறும் திட்டம் நன்மையா? தீமையா?**

சிலர் எப்போது எமக்கு ஓய்வு கிடைக்கும் என்று ஏங்கிக் காத்துக் கொண்டிருப்பார்கள். சிலரோ எனக்கு ஓய்வுக் காலம் நெருக்குகிறதே. இன்னும் சில வருடங்கள் சேவையாற்றலாமே என்று வருத்தப்படுவர்.
ஆனாலும் அரச சுற்று நிரூபங்களுக்கு அமைய செயற்படுவதே சரியானது.
இப்போது சில பாடசாலைகளில் தமக்கு பிடித்த ஆசிரியர்களுக்கு இடமாற்றம் என்றவுடன் அதற்கு எதிராக போராடுவதும் கையெழுத்து வாங்குவதும் புதுவித நோயாகிவிட்டது.
இவர்கள் என்ன டிசைனோ?

**அகிலன் — கனகராயன்குளம்**

**விடுதலைப் புலிகள் உள்ள போது இல்லாத போதைப்பொருள் இப்போது எப்படி வந்தது ஐயா?**

எனக்கு கற்பித்த தலைசிறந்த நாடக ஆசிரியர் குழந்தை ம. சண்முகலிங்கம் அவர்கள் அடிக்கடி கூறுவார்.
கற்பு நெறி என்பது பெண்ணுக்கு மட்டுமல்ல.
ஆணுக்கும் உண்டு. தவறு செய்ய சந்தர்ப்பம் கிடைத்தும் அதிலிருந்து விலகி வருவதே கற்புடமை என்று.
அன்று எமது இனம், எமது தேசம், எமது உரிமைகள் என்ற கற்புடைமைக்குள் இருந்த இனம் இன்று அதற்கு தலைகீழாக இருப்பது தான் வேதனை

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## காலத்தால் அழியாத கானங்கள்

திரைப்படம் : புதிய பறவை
இயற்றியவர் : கண்ணதாசன்
இசை : விஸ்வநாதன் ராமமூர்த்தி
பாடியவர் : பி. சுஷீலா



உன்னை ஒன்று கேட்பேன்
உண்மை சொல்ல வேண்டும்
என்னை பாட சொன்னால்
என்ன பாட தோன்றும்
என்ன பாட தோன்றும்

உன்னை ஒன்று கேட்பேன்
உண்மை சொல்ல வேண்டும்
என்னை பாட சொன்னால்
என்ன பாட தோன்றும்
என்ன பாட தோன்றும்

காதல் பாட்டு பாட காலம்
இன்னும் இல்லை
தாலாட்டு பாட தாயாகவில்லை
உன்னை ஒன்று கேட்பேன்
உண்மை சொல்ல வேண்டும்
என்னை பாட சொன்னால்
என்ன பாட தோன்றும்

நிலவில்லா வானம்
நீரில்லா மேகம்
பேசாத பெண்மை
பாடாது உண்மை
கண்ணை மெல்ல மூடும்
தன்னை எண்ணி வாடும்
பெண்ணை பாட சொன்னால்
என்ன பாட தோன்றும்

உன்னை ஒன்று கேட்பேன்
உண்மை சொல்ல வேண்டும்
என்னை பாட சொன்னால்
என்ன பாட தோன்றும்

தனிமையில் கானம்
சபையிலே மோனம்
உறவுதான் ராகம்
உயிரெல்லாம் பாசம்
அன்பு கொண்ட நெஞ்சில்
அனுபவம் இல்லை
என்னை பாட சொன்னால்
என்ன பாட தோன்றும்

உன்னை ஒன்று கேட்பேன்
உண்மை சொல்ல வேண்டும்
என்னை பாட சொன்னால்
என்ன பாட தோன்றும்
என்ன பாட தோன்றும்

# 20 ஆம் நூற்றாண்டின் ஆகச்சிறந்த கோல் மாவீரன் கடவுளான கதை!

என்னதான் க்ளப் அணிகளுக்காக ஆடினாலும் இளம் வீரர்களும் பல்வேறு ஜாம்பவான்களும் அவர்களின் தாய் நாட்டிற்காக களமிறங்கும் போது நிகழ்த்தும் சாதனைகள் கால்பந்து உலகத்தில் பொன் எழுத்துக்களால் பொறிக்கப் பட்டுக் கொண்டே இருக்கின்றன. அப்படியாக கால்பந்தின் ஆகச்சிறந்த வீரர் ஒருவர் உலகக்கோப்பைத் தொடரில் நிகழ்த்திய மாயவித்தையை பற்றிய குட்டி ரீவைண்ட் இங்கே!

கால்பந்தின் காட்ஃபாதர் டியாகோ மரடோனா 1986 உலகக்கோப்பையில் நிகழ்த்தி காட்டியவற்றிற்கு வரலாற்றில் என்றைக்குமே தனி இடம் உண்டு. அதுவரை ஆர்ஜென்டீனா ரசிகர்களின் மனம் கவர்ந்த நாயகனாக இருந்த மரடோனா அந்த உலகக் கோப்பைக்கு பின்தான் கடவுளாக அவதரித்தார். 1960 ஒக்டோபர் 30 ஆம் திகதி ஆர்ஜென்டீனாவில் லானஸில் பிறந்தார் மரடோனா.

ஆர்ஜென்டீனா அணிக்காக 93 போட்டிகள் விளையாடி 34 கோல்கள் அடித்திருக்கிறார். இந்த 34 கோல்களில் அந்த இரண்டு கோல்களுக்கு மட்டும் ஒரு தனிப்பட்ட வரலாறும் சிறப்பும் உண்டு.


1986 உலகக்கோப்பையை கால்பந்து ரசிகர்களால் அவ்வளவு எளிதில் கடந்துவிட முடியாது. குறிப்பாக கால் இறுதிப் போட்டியில் இங்கிலாந்து, ஆர்ஜென்டீனா அணிகள் மோதின. இந்தப் போட்டியில் 2-1 என்ற கோல் கணக்கில் ஆர்ஜென்டீனா வென்றிருந்தது. ஆர்ஜென்டீனா அடித்த இரண்டு கோல்களும் மரடோனாவால் அடிக்கப்பட்டவைதான். அவர் அடித்த இரண்டு கோல்களில் முதல் கோலை மரடோனா கையை பயன்படுத்தி கோலாக்கியதாக சர்ச்சை எழுந்தது.

உண்மையிலேயே அந்த கோலை மரடோனா கையால் தான் அடித்திருந்தார். ஆட்டத்தின் 51 ஆவது நிமிடத்தில் பாக்ஸ்ஃக்குள் பாஸாகி தன்னை நோக்கி வந்த பந்தை மரடோனா ஹெட்டர் செய்ய முயன்றிருந்தார். அப்போது தலைக்குப் பதிலாக அவரின் கை பந்தில் பட்டு கோலாகியிருந்தது. களநடுவர்களும் இதைக் கவனிக்கவில்லை. சரியாக அடிக்கப்பட்ட கோல்தான் என அறிவித்துவிட்டனர்.

போட்டிக்குப் பிறகான பத்திரிக்கையாளர் சந்திப்பில் இந்த கோல் குறித்து கேட்கப்பட்ட போது "அது கடவுளின் கை" என மரடோனா இலாவகமாக பதில் சொல்லியிருந்தார். அதுவே அவருக்கு 'The hand of God' என்ற பெயர் கிடைக்கப் பெறுவதற்கும் காரணமாக இருந்தது.

அந்த கோலை சுற்றி நிகழ்ந்த சர்ச்சைகளாலும் மரடோனாவின் பதிலாலும் "Hand of God" கோல் எப்போதுமே பேசுபொருளாக பிரபலமாகவே இருந்து வருகிறது. ஆனால், இதே போட்டியில் மரடோனா இன்னொரு கோலையும் அடித்திருந்தார். அந்த கோலை எந்தச் சர்ச்சைகளாலும் சூழ்ந்து கொள்ள முடியாது. யாரும் அந்த கோலில் இம்மியளவு குறையை கூட கண்டறிய முடியாது.

ஏனெனில், மரடோனா அடித்த அந்த கோல்தான் 20 ஆம் நூற்றாண்டின் ஆகச்சிறந்த



கோல்.

86 இல் மெக்சிக்கோவில் நடந்த அந்த உலகக்கோப்பையில் இங்கிலாந்தும் ஆர்ஜென்டீனாவும் சமபலத்துடன் களமிறங்கியிருந்தன. இங்கிலாந்து அணி 1966 உலக கோப்பையை வென்றிருந்தது. அதேபோல் 1978 உலக கோப்பையை ஆர்ஜென்டீனா வென்றிருந்தது.

மேலும், ஆர்ஜென்டீனாவுக்கும் பிரிட்டிஷாருக்கும் இடையே நடந்த ஃபாக்லாந்து போரின் சுவடுகளும் இந்தப் போட்டியை பெரும் எதிர்பார்ப்பு மிக்கதாக மாற்றியிருந்தது. மரடோனா தலைமையிலான ஆர்ஜென்டீனா அணியில் ஜார்ஜ் வந்தோனோ, ரிச்சோ ஜ°வாட்டி எனச் சிறந்த வீரர்கள் இருந்தனர். இங்கிலாந்து அணியில் சிறந்த கோல்கீப்பர் பீட்டர் ஷில்டன், லைனர் என எதிர்த்தரப்பும் வலுவாகவே இருந்தது.

இந்த ஆட்டத்தில் முதல் பாதியில் இரு அணிகளும் கோல் அடிக்கவே இல்லை. 51 ஆவது நிமிடத்தில் மரடோனா தான் முதல் கோலை அடித்தார். mJ j hd ; Hand of God கோல். அடுத்து 55 ஆவது நிமிடத்தில் மீண்டும் மரடோனா ஒரு கோலைப் போட்டார். இங்கிலாந்து வீரர்கள் பீட்டர் பியர்ட்ஸ்லி, பீட்டர் ரீட், டெர்ரி புட்சர், டெர்ரி ஃபென்விக், கோல் கீப்பர் பீட்டர் ஷில்டன் ஆகியோரை கடந்தே மரடோனா அந்த கோலை அடித்திருந்தார். ஆர்ஜென்டீனாவின் பாதி பகுதியிலிருந்தே மரடோனா பந்தை டேக் ஓவர் செய்துவிட்டார்.

அங்கிருந்து அடுத்த 68 மீற்றர்களுக்கு பந்துக்கும் அவருக்கும் மட்டும்தான் உரையாடல். இடையில் யாராலும் ஒன்றுமே செய்ய முடியவில்லை. மரடோனாவின் அந்தத் துரிதமான கால்களுக்கும் அதன் ட்ரிப்பிள்களுக்கும் இங்கிலாந்து வீரர்களிடம் எந்தப் பதிலும் இல்லை. அவர்களுக்கு ஏமாற்றம் மட்டுமே மிச்சம்.

கோல் கீப்பர் ஷில்டன் மரடோனாவின் லாங் ட்ரிப்பிளை கவனித்து சரியான பாதையில் பாயத் தயாராக இருந்தார். அவரையும் சிறிய ட்ரிப்பிள் மூமெண்ட்டிலேயே குழப்பி அட்டகாசமாக கோலாக்கியிருந்தார். போட்டி நடந்த அந்த எஸ்டாடியோ அஸ்டெகா மைதானத்தில் ரசிகர்கள் யாருமே இல்லை. எதிரணியும் யாரும் இல்லை. ஏன் சக வீரர்கள் கூட இல்லை. அங்கே அந்த கோல் நிகழ்ந்த தருணத்தில் அந்த உலகத்தில் ஆள் அரவமற்ற ஒரு மைதானமும் ஒரு கால் பந்தும் கூடவே மரடோனாவும் மட்டுமே இருந்தனர். மரடோனா இப்படி ஒரு உலகத்தை கற்பனை செய்துகொண்டுதான் அந்த கோலை அத்தனை சுலபமாக அடித்திருப்பாரோ எனப் பல சமயங்களில் தோன்றும்.

இப்படி ஒரு கோல் இருபதாவது நூற்றாண்டின் ஆகச் சிறந்த கோல் என்ற பெருமையை பெற்றதில் எந்த ஆச்சரியமும் இல்லை.

இந்தப்போட்டியில் மரடோனா அணிந்திருந்த ஜெர்ஸி சமீபத்தில் இந்திய மதிப்பில் 70 கோடி ரூபாவுக்கு ஏலம் போயிருக்கிறது.

மரடோனாவின் ஜெர்ஸிக்கு விலையை நிர்ணயம் செய்துவிட முடியும். ஆனால், அவரால் நிகழ்ந்த அந்த வரலாற்றுத் தருணம் விலைமதிப்பே அற்றது.

தொடரின் இறுதிவரை சிறப்பாக விளையாடிய ஆர்ஜென்டீனா இறுதிப் போட்டியில் மேற்கு ஜெர்மனி அணியை வீழ்த்தி உலகக்கோப்பையை வென்று சம்பியனானது. இந்தத் தொடரில் மரடோனா 5 கோல்களையும் 5 அசிஸ்ட்களையும் செய்திருந்தார். எல்லாமே வரலாறுதான். ஆயினும், அந்த Hand of God-ம் Goal of the Century-ம் மட்டும் எப்போதுமே கொஞ்சம் கூடுதல் ஸ்பெசல் தான்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சீன ஜனாதிபதிக்கு எதிராக வெடித்த போராட்டம்!

**போராட்டம்...** சீனாவைப் பொறுத்தவரை ஓர் அரிதான நிகழ்வு. அதுவும் ஆளும் கம்யூனிஸ்ட் கட்சிக்கு எதிராக மக்கள் அணி திரள்வது மிக மிக அரிது. அப்படி அரிதான நிகழ்வைத் தற்போது அரங்கேற்றிக் கொண்டிருக்கிறார்கள் சீன மக்கள்!

### எப்படி வெடித்தது போராட்டம்?

சீனாவில் கடந்த சில வாரங்களாக கொரோனா பெருந்தொற்று அதிகரித்துக்கொண்டே செல்கிறது. நாளொன்றுக்கு 40,000 பேருக்கு மேல் கொரோனாவால் பாதிக்கப்படுவதால், 'ஜீரோ கொவிட்' நடைமுறையை அமுல்படுத்தியது சீன அரசு. கொவிட் அதிகம் பரவும் பல்வேறு பகுதிகளில் மிகக் கடுமையான கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டன.

இந்த நிலையில், சீனாவின் ஜின்ஜியாங் மாகாணத்தின் தலைநகரான உரும்கியிலுள்ள உயரமான அடுக்குமாடிக் குடியிருப்பு ஒன்றில் கடந்த வாரம் தீப்பிடித்தது. கொரோனா கட்டுப்பாடு காரணமாக அந்தக் குடியிருப்பின் ஒரு பகுதி முழுவதுமாகப் பூட்டுப் போடப்பட்டிருந்ததால், அங்கிருந்து வெளியேற முடியாமல் போனதில் 10 பேர் உடல் கருகி உயிரிழந்தனர்.



இந்தச் செய்தி பரவியதால், சீனாவின் பல்வேறு இடங்களிலும் கொரோனா கட்டுப்பாடுகளை மீறி மக்கள் சாலையில் இறங்கிப் போராடத் தொடங்கினர். சீன அதிகாரிகளோ, 'கொரோனா கட்டுப்பாட்டால் இந்த உயிர்ப்பலிகள் ஏற்படவில்லை' என்று கூறிவருகின்றனர். அதை ஏற்றுக் கொள்ள மறுத்து, 'ஜனாதிபதி ஜி ஜின்பிங் பதவி விலக வேண்டும்', 'கம்யூனிஸ்ட் கட்சிப் பதவி விலக வேண்டும்' என்கிற கோஷங்களை எழுப்பிவருகின்றனர் போராட்டக்காரர்கள். தலைநகர் பீஜிங், நான்ஜிங் மாகாணங்களிலுள்ள பல்கலைக்கழக மாணவர்கள், உரும்கி, ஷாங்காய் உள்ளிட்ட பகுதிகளிலுள்ள பொதுமக்கள் அரசுக்கு எதிராகப் போர்க்கொடி தூக்கியிருக்கின்றனர். போராட்டத்தை ஒடுக்க பொலிஸார் கொரோனா கவச உடையுடன் மக்கள் மீது தடியடி நடத்தியபோதும் கூட்டம் கலைந்து செல்லவில்லை.


### ஒன்றிணைந்த மக்கள்!

“கொரோனா தொடங்கி மூன்று ஆண்டுகளாகக் கடும் கட்டுப்பாடுகளை எதிர்கொண்டுவருகின்றனர் சீன மக்கள். அதுவும், 'ஜீரோ கொவிட்' திட்டத்தின் கீழ் ஷாங்காய், உரும்கி உள்ளிட்ட பகுதிகளில் 100 நாட்களுக்கு மேலாக வீட்டைவிட்டு யாரும் வெளியே வரக் கூடாது என்பது போன்ற கடுமையான கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டன. மீறுவோருக்குக் கடுமையான தண்டனைகளும் வழங்கப்பட்டன. 'ஜீரோ கொவிட்' என்பது கொரோனா தொற்றைக் கட்டுப்படுத்தும் கடைசி அஸ்திரம். அதை முதற்கட்ட பாதிப்புகளிலேயே பயன்படுத்த உத்தரவிட்டார் ஜின்பிங். இதனால் கடும் அதிருப்தியிலிருந்த மக்களை, உரும்கி தீ விபத்து ஒன்றிணைத்திருக்கிறது" என்கிறார்கள் சீன அரசியலைக் கூர்ந்துநோக்குபவர்கள்.

விதிகளை மாற்றி, மூன்றாவது முறையாகத் தன்னைத் தானே சீன ஜனாதிபதியாகவும், சீன கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச்செயலாளராகவும் நியமித்துக்கொண்டார் ஜி ஜின்பிங்.

அப்போதே, 'சர்வாதிகாரியை நீக்கிவிட்டு, தேர்தல் நடத்தி ஜனாதிபதியைத் தேர்ந்தெடுக்க வேண்டும்' என்ற வாசகங்களுடன் பேனர் வைத்து எதிர்ப்பைப் பதிவுசெய்தனர் சீன மக்கள். தற்போது அந்த எதிர்ப்பு அடுத்தகட்டத்துக்குச் சென்றிருக்கிறது!

# அவசரகால நிதி எம்மிடம் இருக்கிறதா?



ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையாது என்பார்கள். சிறு வயதில் நாம் ஏதாவது விடயத்தைக் கற்றுக் கொண்டால் அது வாழ்க்கை முழுக்க பயன் தருவதாக இருக்கும். உதாரணத்துக்கு, ஐந்து வயதில் ஒருவர் சைக்கிள் ஓட்டக் கற்றுக் கொண்டார் என்றால் அவர் வாழ்நாளில் எப்போதாவது தேவைப்படும் பட்சத்தில் சைக்கிள் ஓட்டுவார். அதாவது, இந்த விடயமும் செயலும் நம்மில் பதிந்து விட்டதால் அது சாத்தியமாகிறது.

### நிதித் திட்டமிடல்...

அதேநேரத்தில், நிதித் திட்டமிடல் என்பது நமக்கு பள்ளிக்கூடத்தில் சொல்லிக் கொடுக்கப்படுவதில்லை. கல்லூரியில் கற்றுத் தரப்படுவதில்லை. ஏன் வீட்டில் நம் பெற்றோர்கூட சொல்லிக் கொடுப்பதில்லை. இதனால் தான் வேலைக்குச் சேர்ந்து கைநிறைய சம்பளம் வாங்கியதும், அதை எப்படி முறையாகச் செலவிட வேண்டும் என்பது தெரிவதில்லை. பெரும் தொகை கிடைத்ததும் அதைக் கண்டபடி செலவு செய்ய ஆரம்பித்து விடுகிறோம்.

பணத்தை சரியாக நிர்வகிக்கத் தெரியாமல் சிக்கலில் மாட்டிக் கொள்கிறோம். நிறைய பணம் அதாவது, கோடிக்கணக்கில் சம்பாதிக்கத் தெரிந்த பலரால் அதைச் சரியாக நிர்வகிக்கத் தெரியாததால், அந்தப் பணத்தை குறுகிய காலத்திலேயே இழந்து நிதிச் சிக்கலில் மாட்டிக் கொள்கிறார்கள்.

'நீங்களும் கோடீஸ்வரர் ஆகலாம்' போன்ற பரிசுப் போட்டிகள், லொட்டரி சீட்டு போன்றவற்றில் பெரும்பணம் பெற்றவர்கள் எல்லாம் இரண்டு மூன்று வருடங்களில் அந்தப் பணத்தை தொலைத்து விடுகிறார்கள்.

நிதித் திட்டமிடலின் அடிப்படை என்பது அவசரகால நிதியாக இருக்கிறது. ஒரு கட்டடத்தின் வலிமை அதன் அடித்தளத்தில் இருக்கிறது. இதேபோல் தான் ஒரு நிதித் திட்டமிடல் வெற்றி பெறுவது, அவசரகால நிதியில் இருக்கிறது. இதை ஒரு தங்க விதிமுறை என்றுகூட குறிப்பிடலாம்.

2020 மார்ச் மாதம் கொரோனா பாதிப்பு தொடங்கி ஊரடங்கு, தொழில் முடக்கம் நடந்ததால் பலருக்கும் சம்பளம் குறைந்தது. வேலை பறிபோனது. அப்போது குடும்பச் செலவுகளைச் சமாளிப்பது மிகக் கடினமாக இருந்தது. போதிய அளவுக்கு அவசரகால நிதியைச் சேர்த்து வைத்திருந்தவர்கள், நிலைமையை சுலபமாகச் சமாளித்து மீண்டு வந்தார்கள்.

### அவசரகால நிதியை எப்படி உருவாக்குவது?

ஒருவர் வேலைக்குச் சேர்ந்தவுடனே அவசரகால நிதியை உருவாக்கிக்கொள்வது அவசியமாகும்.

இந்தப் பணத்தை வேறு எந்தத் தேவைக்கும் வெளியே எடுக்கக் கூடாது. 'இதை அவசரகால நிதியாகவே வைத்திருக்க வேண்டும். மிகவும் நிதி நெருக்கடி ஏற்படும் சூழ்நிலையில் தான் இந்தப் பணத்தை எடுத்து செலவு செய்ய வேண்டும்.

வேலைக்கு புதிதாகச் சேர்ந்திருக்கும் இளைஞர்கள் இதுவரைக்கும் அவசரகால நிதியைச் சேர்க்கவில்லை என்றால் உடனடியாகச் சேர்க்கத் தொடங்குங்கள்.

அவசரகாலச் செலவுகளுக்கு என சேர்த்து வைத்திருக்கும் தொகையை முழுமையாக வங்கி சேமிப்புக் கணக்கில் வைத்திருக்கும் பட்சத்தில் அதற்கு ஆண்டுக்கு சுமார் 3-5 சதவிகிதம் தான் வட்டி கிடைக்கும்.

எனவே, இந்தத் தொகையை முழுமையாக வங்கிச் சேமிப்புக் கணக்கில் வைத்திருப்பதை விட சிறிது தொகையை ஃபிக்ஸட் டெப்பாசிட்டில் பிரித்து போட்டு வைக்கலாம்.

இந்த அவசரகால நிதியை, வேறு நிதித் தேவைகள் உடனடியாக இல்லாத பட்சத்தில், மாதச் சம்பளத்தைக் கொண்டு மூன்று முதல் ஆறு மாதங்களில் உருவாக்கிக் கொள்ள முடியும்.

அப்படி இல்லாத பட்சத்தில் ஓரிரு ஆண்டுகளில் சிறிது சிறிதாகச் சேர்த்து அவசர காலநிதியை எம்மால் உருவாக்கிக் கொள்ள முடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தாயே உன்னை உமிழ்வாள் உன்னை

சத்தமின்றி யுத்தமொன்றும்
நித்தம் நடக்கு திங்கே
சலனமின்றி சர்கார் செயல்
தொடரு திங்கே
நித்த மொரு மரணம் இங்கே
நிகழு திங்கே
நிம்மதியை சீர் கெடுக்கும்
செயலும் கண்டோம்
வேறுருக் எண்ணியதில்
விளைவின் சதியோ
வெந்த புண்ணில் வேலைச் செருகும்
செயலும் முறையோ
புத்தி சுருங்கி போதைக்குள்ளே
புதைந்து போனால்
புயலடித்த மரமாய் நீயும்
சரிந்து வீழ்வாய்
நித்தம் நித்தம் நிம்மதியை
தொலைத்தும் நீயே
நிர்வாணமாய் நாளும் பொழுதும்
திரிவாய் பாரேன்
முத்தமிட்ட அன்னை உன்னை
உமிழ்வாள் இங்கே
மூளை செத்து திரிகின்ற
மகனாய் உன்னை

துரையரசன் -வித்தியாபுரம்,ஏட்டுசுட்டான்.



## தொலைத்ததை தேடிப் பிடிப்போமா?

புள்ளினங்கள் பள்ளியெழுச்சி பாட
விடியலுக்கு சேவல்கள் கட்டியம் கூற
எருதுகளின் "ஜல் ஜல்" நாத ஓசை
சுறுசுறுப்பான மனக்கிளர்ச்சியை ஏற்படுத்த
மண்வெட்டி சுமந்து எம்மவர்
பயிர்செய் நிலங்களுக்குச் சென்ற அன்று
ரம்மியமான பொழுதுகள் தான்
தொற்றாநோய்கள் எதுவென்றே தெரியா
திடமான உடற்கட்டமைப்புடன்
அன்றாடங் காய்ச்சிகள் தான்
ஆனாலும் உணவுக்குப் பஞ்சமில்லை
நோயும் பசியுமில்லா
அந்த அழகிய வாழ்க்கையை தொலைத்தோமே
ஆம் உத்தியோகம் உயர்வென்றோம்
தோட்டம் கொத்துவதை இழிவாக்கினோம்
ஆடம்பரத்துக்கு அடிமையானோம்
சொகுசு வாழ்க்கை தேடினோம்
சுய உற்பத்திகள் முடங்கின
விளைநிலங்கள் குடியிருப்புக்களாயும்
தரிசு நிலங்களையும் மாறிப்போயின
தொற்றாநோய்கள் எமை வாட்ட
நாமே காரணமானோம்
இன்றோ வெளிநாட்டுப் பொருட்களுக்கும்
உணவுப் பொருட்களுக்கும்
அந்நியரிடம் கையேந்தும்
அவலத்துள் நாமிருக்கின்றோம்

சி.இ.அன்புதுரை,
சம்மட்டி ஒலை,மானிப்பாய்.

## "சருகு"



ஆடியில் வேர் வெட்டு
ஓணத்தில் புதைக்கப்பட்டதோ!
ஓரமாய் நான் கிடக்க
உனக்கேன் ஓர் நீதி

பாரினில் நீ நானும்
அழகிய அந்தரங்கங்கள்
பிண்டமாகக் கரையும் உன் நினைவுகள்
தீராத உன் ஆத்மாவுக்கு
முத்தியில் முற்றிட்டு விடுதலையோ

உண்மை உழலும் உயிருள்
உறங்கிடும் உடல் மறுத்திடும்
மீள்சுழற்சியை பூமியில்
பூதகணங்கள் என்றே உன்
புகைப்படங்கள் மட்டும்
கடவுளாய் சில காலம்
நீ வேடம் தாங்கி
அரங்கேற்றிய மேடைகளில்
வேற்று நாடகத்தாருக்கு வாய்ப்போ?
வேற்றுமையால் முதன்மை பெற்றேன்
மாயவன் ஏப்பமிட-உன்
உயிர்வாசம் என்றோ?
காத்திருந்தே கரைதொடு
கானல் நீர் அன்றோ!

சரணியா பிரசாத்

## மௌனத்தின் தேடல்- 586



## தமிழினத்தின் இதயச் சுடர்

பொதுமக்கள், போராளிகள் கொல்லப்படலாம்
மாவீரர் கல்லறைகள் தோண்டப்படலாம்
தாயகமெங்கும் இராணுவ முகாம்கள் நிறுவப்படலாம்
பயங்கரவாதத் தடைச்சட்டம் கைது செய்யலாம்
எத்தனை இடையூறுகள், இன்னல்கள் வந்தாலும்
தமிழினத்தின் இதயச் சுடர்-ஈகச்சுடர் ஒளிரும்

பி.யதுர்சன்,
கொக்குவில்.

## தீதும் தீபமும்

இது தீபத் திருநாளில்
திருவெண்ணா மலையில்
சுடர் விட்டுப் பிரகாசித்து
அருள் வழங்கும் தீபமல்ல
கொழுந்து விட்டெரிவது
கொஞ்சமும் விடுபடாமல்
நெஞ்சில் நிறைந்த துயர
நினைவுகளின் வரைபடம்
மனிதநேயமானது விரைந்து
இனியாவது தலை நிமிரட்டும்

க.நாகராசா, நுணாவில்.

## மெழுகுவர்த்தி

மறத் தமிழனாய்ப் பிறந்து
மண்ணுக்கு உரமாகி
மாற்றானுக்கு அடிபணியாது மாவீரனாய்
தாயகம் காக்க
தன்னுயிர் ஈந்த மெழுகுவர்த்திகளே!
உமை இரு கரம் கூப்பி வணங்கிடுவோம்

ஆ. செல்வி,
பருத்தித்துறை.

## மௌனத்தின் தேடல்- 587



அன்பு வாசகர்களே உங்கள் மனதில் தோன்றும் கவிதை, வியாசர் பதில்களை
ஆசிரியர் மௌனத்தின் தேடல்
வலம்புரி- சங்குநாதம்
இல.03,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
எனும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்

## நினைவு நாள்

களத்தில் களமாடி வீர காவியமானவர்களே
உரிமைக்காக உயிர் கொடுத்தீர்கள்
மானம் காத்து தமிழரை தலைநிமிரச் செய்தீர்கள்
மக்கள் மனங்களில் நீங்கா நினைவுகளுடன்
ஆண்டுதோறும் கார்த்திகை 27 நினைவு நாள்

கும்பவாழியான்,
உடுப்பிட்டி.

## ஆதவனுக்கு நிகராய்...

ஈகத்தால் உயிர் தந்த - தமிழ்
ஈழத்து மைந்தர்களுக்கு
ஈகச் சுடரேற்றி
அணையாத பெருஞ்சுடராம்
ஆதவனுக்கு நிகராய் வணங்குவோம்

பி.மதுஷன்
உடுப்பிட்டி.

## சிதைந்தன தாயகக் கனவுகள்

ஓராயிரம் ஆசைகள் தனை நெஞ்சோரம் தனில் சுமந்து
பிரசவ வலிதனை தனதாக்கி
ஆசை மகவு தனை மண்ணுலகிற்கு உதயமாக்கி
மண்ணின் விடியலுக்காய்
பருவ வயதினிலே பாலகன் தனை இழந்து
பரிதவித்திடும் அன்னையின் வலிக்கு முன் ஏதும் நிகரில்லை?

ஆ.பாலமதுஜா,
யா/மெதடிஸ்த பெண்கள்
உயர்தரப் பாடசாலை.

## வீர மறவர்களுக்கு அஞ்சலி

நம் நாட்டில்
மண் மீட்புக்கான உரிமைப் போராட்டத்தில்
உயிர்த் தியாகம் செய்த வீர
மறவர்களுக்கு நாம்
வருடம்தோறும் இப்படி ஈகச் சுடரேற்றி
மனதாலும் உடலாலும் உணர்வுபூர்வமாய் கை கூப்பி
அஞ்சலி செலுத்துகிறோம்.

சுப்பிரமணியம் ஜெயரூபன்,
பருத்தித்துறை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# கடல் புறா

காலத்தின் பதிவு 44

## முடியாத விழா

சொர்ணபூமியின் பூர்வகுடிகளின் தலைவர் நால்வரும் வந்தால் குழப்பமும் பூசலும் விளையுமென்பதைத் திட்டமாக அறிந்திருந்த பலவர்மன் அத்தகைய பூசல்களையும் குழப்பத்தையும் சாதாரணமாக விரும்பும் அக்ஷயமுனைத் தலைவன். அன்று மட்டும் குழப்பத்தையோ பூசலையோ அடியோடு விரும்பவில்லை. ஏதாவது குழப்பம் ஏற்பட்டு இளையபல்லவன் உயிருக்கு ஆபத்து ஏற்படுமானால் அக்ஷயமுனைக்கும் தனக்கும் ஏற்படக்கூடிய பயங்கர விளைவை எண்ணிப் பெரும் பீதியுடனேயே அன்றைய நடனத்துக்கு வந்திருந்தான் பலவர்மன்.

அசூதா பழிவாங்கும் முறைகளையும் அவன் ஓரிடத்துக்கு வந்துவிட்டுப் போனால் அந்த இடம் சுடலைக்குச் சமானமென்பதையும் உணர்ந்திருந்த பலவர்மன், அன்று நடன நிகழ்ச்சி ஏன் நடக்கிறதென்ற வெறுப்புடனேயே வந்திருந்தான். அவனுக்கு அசூதாவிடம் அச்சம் ஒருபுறம். பூர்வகுடித் தலைவர்களிடமுள்ள பயம் மற்றொரு புறம்.

இந்த இரண்டுவித கிலிகளும் அவனை வாட்டி வதைத்துக் கொண்டிருந்தன. நடன நிகழ்ச்சிக்கு வரும் பதக் இனத் தலைவர்களையோ சூலுக்களையோ தான் விரோதித்துக் கொண்டாலும், அக்ஷயமுனையில் அதிகநாள் வாழ்வது கஷ்டமென்பதை அவன் உணர்ந்திருந்தான்.

இராக் காலங்களில் பிசாசுகளைப்போல உலாவும் வழக்கமுடைய அந்த நாகரிக மக்கள், தலைவர்களால் ஏவப்பட்டால் பிரதி தினமும் அக்ஷயமுனைக்கு வந்து தொல்லை கொடுப்பார்களென்பதையும் பிறகு அக்ஷயமுனை வாழ்க்கை பெரும் நரகமாகிவிடுமென்பதையும் அவன் அறிந்திருந்தபடியால், அன்றைய நிகழ்ச்சியில் அதிகக் கலவரம் ஏதும் ஏற்படாமலிருக்கச் சற்று முன்னேற்பாடுடனேயே வந்திருந்தான்.

இளையபல்லவன் உயிருக்குத் தீங்கு ஏற்படும்போல் தோன்றினால் தன் சைகைப்படி நகர்ந்து அவனுக்குப் பாதுகாப்பு அளிக்கும்படி காவல்வீரர்களுக்குக் கண்டிப்பான உத்தரவிட்டதன்றி, பூர்வகுடித் தலைவர்கள் வந்தால் அவர்கள் மீதும் ஒரு கண் வைத்திருக்கும் படியும் கூறியிருந்தான். தவிர மண்டபத்தின் முன்னணியில் இளைய பல்லவன் உட்காருவான் என்பதை அவன் ஊகித்திருந்ததால் அந்த இடத்தில் காவலையும் பலப்படுத்தி இருந்தான்.

இத்தனை முன்னேற்பாடுகளைச் செய்திருந்தும்கூட அவன் உள்ளத்தைச் சந்தேகமும் பயமும் வாட்டி வதைத்துக் கொண்டிருந்தன. பலவர்மன் இயற்கையாகக் கோழை மனம் படைத்தவனல்லவென்றாலும், இளைய பல்லவனின் திடீர் வரவால் ஏற்பட்ட சந்தர்ப்பங்கள் அவனைப் பெரும் பயத்திற்கே உள்ளாக்கியிருந்தன.

ஆகவே எந்த விநாடியிலும் குழப்பத்தையும் பூசலையும் எதிர்பார்த்து இருப்பினும், மேலும் எந்தவித உணர்ச்சியையும் அதிகமாகக் காட்டாமலும் அமர்ந்திருந்த பலவர்மன் திடீரென்று மண்டபத்தின் முன்பு ஏற்பட்ட நிகழ்ச்சியால் ஒரு விநாடி திகைத்தே போனான். பூர்வகுடித் தலைவர்கள் வழக்கம்போல் அன்றும் நடனம் துவங்கிய சிறிது நேரத்துக்குப் பின்பே வந்தது அவனுக்கு வியப்பாயில்லை. அவர்கள் வந்து தனது ஆசனத்துக்குப் பின்னால் வரிசையாக நின்றதும் அவனுக்கு விசித்திரமாயில்லை. எந்த இளையபல்லவன் உணர்ச்சிவசப்படாதவன் என்று காலையில் எடை போட்டானோ அந்த இளையபல்லவன் உணர்ச்சிக்கு இடங்கொடுத்து மேடையை நோக்கி விரைந்தது முதலில் வியப்பாயிருந்தது. அடுத்த விநாடி இரண்டு குறுவாள்கள் மோதித் தரையில் விழுந்தது திகைப்பாயிருந்தது.

திகைப்பும் வியப்பும் கலந்த உணர்ச்சிகளின் வசப்பட்ட பலவர்மன் வெகுசீக்கிரம் திகைப்பை உதறி விட்டு வியப்பின் வசமே சிக்கிக் கொண்டான். வில்வலன் குறுவாள் வீச்சால் ஏற்பட்ட விபரீதம் பெரும் குழப்பத்திலும், கொள்ளையர், பூர்வகுடிகள் கைகலப்பிலும் முடிவடையும் என்று எதிர்பார்த்தான் பலவர்மன். (தொடரும்...)

# உலகின இயற்கை அதிசயங்கை ஏழு-பகுதி 1



அதன் கிளை அருவிகளில் பிரதானமானவை சான் மார்ட்டின் அருவி மற்றும் பொசாட்டி அருவி ஆகியன. பிரேசிலிலிருந்து இகுவாசு அருவி உற்பத்தியானாலும் இது பிரேசிலின் நிலப்பகுதியில் சுமார் 20 சதவீத இடத்தில் மட்டும் விழுகிறது.

மீதமுள்ள 80 சதவீத நீர்வீழ்ச்சி விழுகிற இடம் ஆர்ஜெண்டினாதான். பிரேசிலின் போஸ் தோ இகுவாசு நகரத்தினையும், ஆர்ஜென்டீனாவின் பியூர்ட்டோ இகுவாசு நகரினையும் நீர்க்கயிற்றால் இணைத்துக்கொண்டு வனப்புடன் விழும் இகுவாசு அருவி உலக பாரம்பரியச் சின்னங்களில் ஒன்றாக யுனெஸ்கோ அமைப்பினால் தேர்வு செய்யப்பட்டிருக்கிறது.

அதோடு மட்டுமல்லாமல் பிரேசிலில் உள்ள தேசிய இகுவாசு பூங்கா 1984 இலும், ஆர்ஜென்டினாவிலுள்ள இகுவாசு தேசிய பூங்கா 1987 இலும் பாதுகாக்கப்பட வேண்டிய பாரம்பரிய இடங்களாக தேர்வு செய்யப்பட்டது பெருமைக் குரிய விடயங்களாகும்.

இரண்டு பூங்காக்களுமே அருவிக்கு அருகில் தான் அமைந்துள்ளன. இரண்டு பூங்காக்களையுமே கடவுள் உருவாக்கிய பூங்காக்கள் என அந்தந்த தேசத்தினர் அழைத்துக் கொள்கின்றனர்.

இகுவாசு அருவியை பற்றி அமெரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி ரூஸ்வெல்ட்டின் மனைவி எலினோர் குறிப்பிடுகையில் நயாகராவின் எளிமைப் படுத்தப்பட்ட வடிவம் என்றார்.

இன்னொரு சாரார் தென் ஆபிரிக்காவில் உள்ள உலகப் புகழ் பெற்ற விக்டோரியா நீர்வீழ்ச்சியின் மற்றொரு பிரதி என்றும் புகழ்கிறார்கள்.

குதிரையின் லாடம் போன்ற வடிவத்தில் விழும் இகுவாசு அருவியின் தோற்றத்தை பறவைக் கோணத்தில் பார்ப்பது அத்தனை அற்புதமான அனுபவம் என்பார்கள்.

இதன் காரணமாக அருவியின் அருகே இரண்டு நாடுகளுமே வாடகை ஹெலிகொப்டர்களை இயக்கி அவற்றின் வழியே சுற்றுலாப் பயணிகளுக்கு அந்த சுக அனுபவத்தை வழங்குகின்றன.

இகுவாசு அருவியைக் காட்டிலும் அளவிலும் விழும் வேகத்திலும் மிகப்பெரிய அருவிகள் உலகில் பல உள்ளன. உலக பிரம்மாண்ட அருவிகள் பட்டியலில் ஆறாவது இடத்தில்தான் இகுவாசு அருவி உள்ளது.

இருப்பினும் அது அமைந்திருக்கும் இடம் அதன் எழில்மிகு தோற்றம் அதன் அதிகப்படியான கிளை அருவிகள் காரணமாக வாக்கெடுப்பில் அதிகம் பெற்று உலக இயற்கை அதிசயங்கள் பட்டியலில் இடம்பிடித்துள்ளது.

### உலக இயற்கை அதிசயங்கள் ஏழு பகுதி 2

### ஹலாங் விரிகுடா

ஹலாங் விரிகுடா என்பது வடக்கு வியட்நாம் பகுதியில் தலைநகர் ஹனோய்க்குக் கிழக்கே 170 கிலோ மீற்றர் தொலைவில் குவாங்க்க நின் மாகாணத்தில் சீனாவின் எல்லைப் பகுதிக்கு சற்று நெருங்கும் இடத்தில் அமைந் திருக்கும் ஹலாங் நகரத்தை ஒட்டியுள்ளது.

ஹலாங் என்பதற்கு சினோ வியட்நாமிய மொழியில் கடல் நாகத்தின் தலைகீழ் வடிவம் என்று பொருள். சினோ வியட்நாமிய மொழி என்பது சீன மொழியும் வியட்நாமிய மொழியும் கலந்து இயல்பாக உருவாமொழி.

(தொடரும்....)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

'நித்திலம் தொகுத்து வழங்கும்'

# சுகமான விடியல்

319

வலம்புரியின் மருத்துவச்சுடர்

## உணர்வுகளை உயிருடன் புதைத்தால் அவை ஒருநாள் உயிர்த்தெழும்

மனித வாழ்வில் உணர்வுகள் முக்கியமானவை. பல சமயங்களில் நாம் எமது உணர்வுகளில் வாழ்கின்றோம். ஆரோக்கியமான வாழ்க்கைக்கு உணர்வு வெளிப்பாடு மிகவும் முக்கியமானது. இதற்கான பயன்தரவுள்ள படிமுறைகளைச் சிந்திப்போம்.

உணர்வுகளை இனம் காணுதல் இதுதான் முதற்படி. பல உணர்வுகள் எமக்குப் பழக்கமானவை. மகிழ்ச்சி,ஆச்சரியம், பயம், பாலுணர்வு, வெறுப்பு, குற்றவுணர்வு, கோபம், பொறாமை,திருப்தி என அவை பல வகைப்படும். இந்த உணர்வுகளுள், எமது தற்போதைய உணர்வு என்ன என்பதற்கான விடை எமக்குத் தெரிந்திருத்தல் நன்று. உணர்வுகளைப் புரிந்து கொள்ளப் பின்வரும் வழிமுறைகள் பயனுடையவை.

**சுய உரையாடல்**

எம்முடன் நாம் உரையாடத் கற்றுக் கொள்வதன் மூலம் எமது உணர்வுகளை நாம் புரிந்து கொள்ளலாம். நாம் பல தடவைகளில் ஆச்சரியப்படும் அளவுக்கு எமது உணர்வுகள் வேறுபடுவதை இச் செயன்முறையின் மூலம் அறிந்து கொள்ள முடியும்.

**எழுதுதல்**

எமக்காக நாம் செலவிடும் நேரங்களில் இதனை மேற்கொள்ளலாம். ஒரு அமைதியான குழப்பமில்லாத இடத்தில் உணர்வு வெளிப்பாட்டை அடிப்படையாக வைத்து மனம் விரும்பிய போக்கில் எழுதுவது எமது உணர்வுகளை எமக்கு வெளிப்படுத்தும்.

**நட்புடன் அளவளாவுதல்**

எமக்கு நம்பிக்கை உறவுகளில் எம்மை நாம் வெளிப்படுத்தும் போது எமது உண்ர்வுகளை நாம் இணங்காணலாம்.

**உணர்வுகளை ஏற்றுக்கொள்ளலும் பொறுப்பெடுத்தலும்.**

இது இரண்டாம் படி. மிகவும் முக்கியமானதும் கூட. நாம் இனங்காணக்கூடிய எல்லா உணர்வுகளையும் எம்முடைய உணர்வுகளாக ஏற்றுக்கொள்வதும் அவற்றுக்கு நாம் தான் பொறுப்பு எனப் பொறுப்பு எடுப்பதும் இன்றியமையாதன. பொதுவாக எதிர்மறை உணர்வுகளான கோபம், பொறாமை, குற்றவுணர்வு போன்றவற்றைப் பொறுப்பெடுக்க நாம் விரும்புவதில்லை.

உதாரணம். நான் கோபப்பட்டேன் என்று சொல்வதைத் தவிர்த்து எனக்கு கோபம் வந்தது என்று கூறுவதைக் குறிப்பிடலாம். சில உணர்வுகளை ஏற்றுக்கொள்வதில் எமக்குப் பண்பாட்டு ரீதியான தடைகள் தடங்கலாக இருக்கலாம், பாலுணர்வு அவற்றில் முக்கியமானது.

**உணர்வுகளை ஆரோக்கியமாக வெளிப்படுத்துதல்**

இந்தச் செய்முறை எமது வாழ்வையே தீர்மானிக்கின்றது. இது ஒவ்வொருவருக்கும் தனித்துவமானது. நாம் இனங்கண்ட ஏற்றுக் கொண்ட ஒவ்வோர் உணர்வையும் ஆரோக்கியமாக வெளிப்படுத்தும் போது நாம் ஆளுமையில் வளர்ச்சியடைகின்றோம். பொதுவாக நேர்மறையான உணர்வுகளை வெளிப்படுத்துவது எமக்கு இலகுவானதாகவும் எதிர்மறையான உணர்வுகளை வெளிப்படுத்துவதும் எமக்கே கடினமானதாகவும் அமையலாம். குறிப்பாக எதிர்மறையான உணர்வுகளை ஆரோக்கியமாகக் கையாளுதல் எமக்கும் பிறருக்கும் மிகவும் முக்கியமானதாகும். உதாரணம் "நான் கோபத்தில் கத்திவிட்டேன்" அல்லது நான் கோபத்தில் எனது பிள்ளையை அடித்து விட்டேன் போன்ற வாக்கியங்கள் நாம் அடிக்கடி கேட்பவை.

**எதிர்மறையான உணர்வுகளைக் கையாளும் போது கவனிக்க வேண்டியவை.**

அவ்வுணர்வுகள் நியாயமானவையா எனச்சிந்தித்தல். உதாரணம் கோபம் நியாயமானதா? என்ற வினாவுக்கு விடை தேடுதல்.

அது நியாயமானதெனில் அதற்கான அடிப்படைக் காரணத்தைக் கண்டறிய முற்படல். எனது வரம்புக்குள் அக்காரணத்தை நிவர்த்தி செய்ய முற்படல். இதற்காகப் பல்வேறு தரப்பினருடனும் கலந்துரையாடலில் ஈடுபட வேண்டி ஏற்படலாம்.

நிவர்த்தி செய்யமுடியாத காரணங்களாயின் உணர்வு வெளிப்பாட்டை மையப்படுத்திச் செயற்படுதல், இதற்கும் உரையாடுதல், எழுதுதல், வாய்விட்டுப் பிரார்த்தனை செய்தல், அழுதல் போன்ற முறைகளை பயன்படுத்தலாம்.

சரியான நேரத்தில் பொருத்தமான நபரிடம் பொருத்தமான அளவில் பொருத்தமான முறையில் உணர்வுகளை வெளிப்படுத்தல் மிகவும் முக்கியமானது. உணர்வுகளை இனங்கண்டு உணர்ந்து அவற்றுக்கு உரிமைகோரி உவப்புடன் வெளிப்படுத்தினால் நாம் ஆளுமையில் வளர்ச்சியடைவோம். அதைவிடுத்து உணர்வுகளை உயிருடன் புதைத்தால் அவை ஒருநாள் உயிர்த்தெழும்.

**Dr. G.J.பிரதீபன்**
**வைத்திய நிபுணர்**


## கேள்விகளுக்குப் பதில்

**எனக்கு 45 வயது. மலச்சிக்கல் உள்ளது. இதனால் உடலில் பல பிரச்சினைகள் ஏற்படுகின்றன. இதற்கு சரியான தீர்வு சொல்லுங்கள்.**

மலச்சிக்கல் எனப்படுவது ஒரு வாரத்தில் 03 தடவைகளுக்கு குறைவாக மலம் கழித்தல் அல்லது மலத்தின் கடினத்தன்மை அல்லது மலம் கழித்தனிலுள்ள கடினத்தன்மை அல்லது பூரணமாக மலம் கழிக்கவில்லை என்ற உணர்வு என வரையறை செய்யலாம்.

பொதுவாக மலச்சிக்கலானது முறையற்ற உணவுப் பழக்கங்கள், நீர் அருந்துதல் போதாமை, ஒழுங்கற்ற முறையில் மலங்கழிக்க செல்லுதல் போன்றவற்றினால், ஏற்படலாம். இவற்றை விட சில மருத்துவ காரணங்களாலும் மலச்சிக்கல் ஏற்படலாம். உதாரணமாக தைரொக்சின் குறைபாடு, வேறு சில மாத்திரைகள் பயன்படுத்துதல், வேறு குடல் சம்பந்தமான நோய்கள் போன்றவையாகும்.

எனவே நீங்கள் மலச்சிக்கலை தவிர்ப்பதற்கு ஒவ்வொரு நாளும் குறைந்தது 2 லீற்றர் நீராவது அருந்த வேண்டும். உங்கள் உணவில் அதிகளவு நார்ப்பொருளுள்ள உணவுகளை, பழங்கள், மரக்கறிகளை அதிக அளவில் சேர்த்துக் கொள்ள வேண்டும். இவற்றை விட நீங்கள் தினமும் குறித்த ஒரே நேரத்தில் மலங்கழிக்க செல்ல உங்களை பழக்கப்படுத்திக் கொள்ள வேண்டும். இவ்வாறு செய்துவர உங்கள் மலச்சிக்கல் நீங்கும். இவற்றை விட நீங்கள் வேறு ஏதாவது மலச்சிக்கல்லை ஏற்படுத்தக் கூடிய மாத்திரைகளை பயன்படுத்தினால் அவை பற்றி உங்கள் மருத்துவரிடம் கேட்டு அவற்றை தவிர்த்துக் கொள்ளுங்கள்.



இவற்றுக்கு உங்கள் மலச்சிக்கல் குணமடையாது விடின் மருத்துவரை நாடி உங்களுக்கு மேற்குறிப்பிட்டது போன்று வேறு ஏதாவது காரணங்கள் உண்டா என்று அறிந்து அவற்றிற்கு உரிய சிகிச்சையை பெற்றுக்கொள்ள வேண்டும்.

நீங்கள் உடலில் பல பிரச்சினைகள் ஏற்படுகின்றது என குறிப்பிட்டுள்ளீர்கள். ஆனால் அவை என்ன என குறிப்பிடப்படவில்லை உங்களுக்கு மலச்சிக்கலுடன் நிறை அதிகரித்தல்,. பசியின்மை, குளிரை தாங்கமுடியாமை, தோல் உலர்வடைந்து காணப்படல், பகலில் நித்திரை தூக்கம், தலைமுடி உதிர்த்தல், போன்றன காணப்படின் இவை தைரொயிட் குறைபாட்டிற்குரிய அறிகுறிகளாகும். எனவே நீங்கள் மருத்துவரை நாடி அதற்கு உரிய சிகிச்சை பெற்றுக்கொள்வது சிறந்தது.

**Dr.சி.சிவன்சுதன்**
**பொது வைத்திய நிபுணர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முகூர்த்தம்

No.1 & Most Trusted Matrimony Service

## மணமகன் | மணமகள் தேவை

| | |
|---|---|
| FMID : MM17253<br>Gender : Male<br>வதிவிடம் : Canada<br>வயது / உயரம் : 29/ 5'6<br>கல்வித்தகமை : Diploma<br>தொழில் : Private<br>ராசி / நட்சத்திரம் : Kumbam / Poorattathi | FMID : MM16283<br>Gender : Male<br>வதிவிடம் : London<br>வயது / உயரம் : 33 / 5'5<br>கல்வித்தகமை : Masters<br>தொழில் : Private<br>ராசி / நட்சத்திரம் : Virutsigam / Keattai |
| FMID : MM15786<br>Gender : Male<br>வதிவிடம் : France<br>வயது / உயரம் : 27 / 5'10<br>கல்வித்தகமை : Bachelors<br>தொழில் : Private<br>ராசி / நட்சத்திரம் : Rishabam / Krithikai | FMID : MM16396<br>Gender : Male<br>வதிவிடம் : United States<br>வயது / உயரம் : 32 / 5'7<br>கல்வித்தகமை : Bachelors<br>தொழில் : Engineering<br>ராசி / நட்சத்திரம் : Kanni / Astham |
| FMID : MM16829<br>Gender : Male<br>வதிவிடம் : Swiss<br>வயது / உயரம் : 32 / 5'10<br>கல்வித்தகமை : A/L<br>தொழில் : Private<br>ராசி / நட்சத்திரம் : Magaram / Uthiraadam | FMID : MM16765<br>Gender : Female<br>வதிவிடம் : Canada<br>வயது / உயரம் : 32 / 5'6<br>கல்வித்தகமை : Diploma<br>தொழில் : Private<br>ராசி / நட்சத்திரம் : Rishabam / Rohini |
| FMID : MM12811<br>Gender : Female<br>வதிவிடம் : London<br>வயது / உயரம் : 32 / 5'4<br>கல்வித்தகமை : Bachelors<br>தொழில் : Private<br>ராசி / நட்சத்திரம் : Meenam / Revathi | FMID : MM17033<br>Gender : Female<br>வதிவிடம் : United States<br>வயது / உயரம் : 27 / 5'2<br>கல்வித்தகமை : Bachelors<br>தொழில் : Private<br>ராசி / நட்சத்திரம் : Rishabam / Rohini |

Address : 402/1 K.K.S Road Jaffna 074 353 6881

(13659)

---

SEYLAN BANK PLC

## செலான் வங்கியிடமிருந்து சௌபாக்கியா கடன் திட்டத்தின் கீழ் விவசாயம், கால்நடை வளர்ப்பு கடற்றொழில் துறைகளுக்கு குறைந்த வட்டியில் கடன் வசதிகள்

**விளம்பர விபரணம்**

அன்புடன் அரவணைக்கும் வங்கி. செலான் வங்கி . சிறிய நடுத்தரளவு தொழில் முயற்சியாளர்களின் தொழிற்படு மூலதன வசதிக்கு ஆதரவளிக்கும் வகையிலமைந்த நிதி வசதிகளை வழங்கி வருவதுடன். அதனூடாக பொருளாதார சுபீட்சத்துக்கு முக்கிய பங்காற்றுகின்றது. அதன் பிரகாரம். சிறிய நடுத்தரளவு தொழில் முயற்சியாண்மைகளுக்கு நிதி உதவிகளை வழங்கும் வகையில் மத்திய வங்கியின் மீள் நிதியளிப்பு சௌபாக்கியா கடன் திட்டத்தின் கீழ் குறைந்த வட்டி வீதங்களில் வழங்க முன்வந்துள்ளது.

நாட்டின் மொத்தத் தேசிய உற்பத்தியில் பங்களிப்பு வழங்கும் சிறிய நடுத்தரளவு தொழில் முயற்சியாண்மைகளை ஊக்குவிப்பதனூடாக இந்த பொருளாதார நெருக்கடி நிலவும் காலப்பகுதியில். பொருளாதார அபிவிருத்தியை நோக்கி நகர்வதற்கு பங்களிப்பு வழங்கக்கூடியதாக இருக்கும் என்பதுடன். நாட்டின் பொருளாதாரத்தில் பெருமளவில் பங்காற்றும் சிறிய நடுத்தரளவு தொழில்முயற்சியாண்மைத் துறையின் தொடர்ச்சியான செயற்பாட்டுக்கும் ஆதரவளிக்க தனது பங்களிப்பை வழங்க செலான் வங்கி தன்னை அர்ப்பணித்துள்ளது.

இந்தக் கடன் திட்டத்தின் கீழ் விவசாயம். கால்நடை வளர்ப்பு. கடற்றொழில் ஆகிய மூன்று துறைகளிலும் விளைச்சலை பதப்படுத்தும் செயற்பாடுகளில் ஈடுபடும் தொழில் முனைவோர் உள்வாங்கப்பட்டுள்ளதுடன்.இவர்களுக்கு ஆகக்கூடியது ரூ.25.000.000 வரை கடன் வசதியைப் பெற்றுக் கொள்ள முடியும். 60 மாதங்கள் வரை மீளச் செலுத்தும் காலம் வழங்கப்படுவதுடன். வருடாந்த வட்டியாக 9% அறவிடப்படும்

இந்தக் கடன் வசதியைப் பெற்றுக் கொள்வதற்கான தகைமையாக குறித்த வியாபாரங்களின் காணி மற்றும் கட்டடங்கள் தவிர்ந்த மொத்த சொத்துக்களின் பெறுமதி ரூ .40 மில்லியனை விட குறைவாக அமைந்திருப்பதுடன். ஊழியர்களின் எண்ணிக்கை நூறிலும் குறைவாக இருக்க வேண்டும். மில்லியன் 1 க்கு குறைவான கடன் வசதியை எதிர்பார்க்கும் வியாபாரங்களுக்கு குறைந்த ஆவணங்களுடன் துரிதமாக கடன் வசதியை வழங்குவதற்கான ஏற்பாடுகளை செலான் வங்கி மேற்கொண்டுள்ளது.

**செலான் வங்கி பற்றி**

அன்புடன் அரவணைக்கும் வங்கி. செலான் வங்கி. அதிநவீன தொழில்நுட்பம். புதுமையான கணக்குகள் மற்றும் வகுப்பில் சிறந்த சேவைகள் மூலம் அதன் மதிப்புமிக்க வாடிக்கையாளர்களுக்கு உன்னத வங்கி அனுபவத்தை வழங்குவதற்கான தொலைநோக்குடன் செயற்படுகிறது. சிறிய மற்றும் நடுத்தர. சில்லறை மற்றும் நிறுவனங்கள் என வளர்ந்து வரும் வாடிக்கையாளர்களைக் கொண்டுள்ள வங்கி. நாடு முழுவதிலும் 540 க்கும் அதிகமான வாடிக்கையாளர் தொடர்பு கொள்ளும் அலகுகளைக் கொண்டுள்ளது. பிற்ச் மதிப்பீடுகளால் செலான் வங்கி தேசிய நீண்டகால மதிப்பீடு 'A (LKA)'ஆக தரப்படுத்தப்பட்டுள்ளதுடன். அதனூடாக செயற்றிறன் சிறப்பைக் கொண்ட நிதி ரீதியாக நிலையான அமைப்பாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இந்த சாதனைகள் செலான் வங்கியின் நிதி ஸ்திரத்தன்மை மற்றும் அனைத்து அம்சங்களிலும் சிறந்து விளங்குவதற்கான உறுதியான அர்ப்பணிப்புக்கு [illegible]

---

## காணி குத்தகைக்கு

யாழ்ப்பாணம் மணிக்கூட்டு கோபுர வீதியில் 3 பரப்பு வெற்றுக்காணி குத்தகைக்கு உண்டு.

076 690 8967

077 751 2299

## வீடு விற்பனைக்கு

வெள்ளவத்தையில் ஹம்டன் லேனில் இரண்டு அறை வீடு 4 ஆம் மாடியில் விற்பனைக்குண்டு. 115 இலட்சம்.

071 4840 610

## மணமகன் தேவை

1987.இந்து.பூராடம்.Doctor, யாழ்ப்பாணம். மணமகள் பதிவு இல: 8200.பதிவுக் கட்டணம் மட்டுமே.தரகர் கூலி இல்லை. WWW.EQMarriage Service.com,Ensured Quality Lanka Pvt Ltd., Colombo 04. அழையுங்கள் 076 664 9401.

## மணமகள் தேவை

1985.இந்து பூராடம். Doctor. மானிப்பாய். மணமகன் பதிவு இல: 8586.பதிவுக் கட்டணம் மட்டுமே. தரகர் கூலி இல்லை. WWW.EQMarriage Service.com,Ensured Quality Lanka Pvt Ltd., Colombo 04. அழையுங்கள் 076 664 9401.

## மணமகன் தேவை

1994.இந்து.அவிட்டம்.Civil Engineer.புதுக்குடியிருப்பு. மணமகள் பதிவு இல: 8512.பதிவுக் கட்டணம் மட்டுமே. தரகர் கூலி இல்லை. WWW.EQ Marriage Service.com,Ensured Quality Lanka Pvt Ltd., Colombo 04. அழையுங்கள் 076 664 9401.

## மணமகள் தேவை

1989.இந்து.மூலம்.Doctor. பருத்தித்துறை. மணமகன் பதிவு இல: 8557.பதிவுக் கட்டணம் மட்டுமே. தரகர் கூலி இல்லை. WWW.EQMarriage Service.com,Ensured Quality Lanka Pvt Ltd., Colombo 04. அழையுங்கள் 076 664 9401.

## மணமகன் தேவை

1974.இந்து.சதயம்.Teacher. பருத்தித்துறை. மணமகள் பதிவு இல: 8492.பதிவுக் கட்டணம் மட்டுமே.தரகர் கூலி இல்லை. WWW.EQMarriage Service.com,Ensured Quality Lanka Pvt Ltd., Colombo 04. அழையுங்கள் 076 664 9401.

## மணமகள் தேவை

1990.இந்து.ரோகிணி. Accountant, London, மணமகன் பதிவு இல: 8530.பதிவுக் கட்டணம் மட்டுமே. தரகர் கூலி இல்லை. WWW.EQMarriage Service.com,Ensured Quality Lanka Pvt Ltd., Colombo 04. அழையுங்கள் 076 664 9401.

---

# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு:1988 இந்து<br>நட்சத்திரம்: திருவோணம் 1<br>கி.பா:72 ¾ சூரி 8 செவ் 1 இல்<br>உயரம்:166 cm<br>தகைமை/தொழில்: HND மருந்தாளர் (அரச)<br>எதிர்பார்ப்பு: அரச தொழில் மட்டும்<br>தொ.இ:B/13178 | பிறப்பு: 1992 இந்து<br>நட்சத்திரம்: மூலம் 4<br>கி.பா:34 சூரி 12 செவ் 10 இல்<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்:A/L விவாகரத்தானவர்<br>எதிர்பார்ப்பு: அரச தொழில்<br>தொ.இ: G/11334 |
| பிறப்பு: 1992 இந்து<br>நட்சத்திரம்: புனர்பூசம் 4<br>கி.பா: 36 சூரி 5 செவ் 4 இல்<br>தகைமை/தொழில்: A/L காப்புறுதி முகவர்<br>எதிர்பார்ப்பு: வெளிநாடு மட்டும்<br>தொ.இ: B/13179 | பிறப்பு: 1991 இந்து<br>நட்சத்திரம்: பூரம் 1<br>கி.பா: 6 ¾ சூரி, செவ் 9 இல்<br>உயரம்:5'6"<br>தகைமை/ தொழில்: BA பட்டதாரி அபிவிருத்தி உத்தியோகத்தர்<br>எதிர்பார்ப்பு: தகுந்தவரன்<br>தொ.இ: G/11341 |
| பிறப்பு: 1994 கிறிஸ்தவம் RC<br>நட்சத்திரம்: ரேவதி 2<br>கி.பா: சூரி 9 செவ் 8 இல்<br>உயரம்: 5'10"<br>தகைமை/தொழில்: LLB வங்கியாளர்<br>எதிர்பார்ப்பு: அரச உத்தியோகம் ஆசிரியர் விரும்பத்தக்கது<br>தொ.இ: B/13181 | பிறப்பு: 1994 இந்து<br>நட்சத்திரம்: அவிட்டம் 4<br>கி.பா:42 சூரி 12 .செவ் 10 இல்<br>உயரம்:5'4"<br>தகைமை/தொழில்: MBBS வைத்தியர்<br>எதிர்பார்ப்பு: உயர்பதவி<br>தொ.இ: G/11351 |
| பிறப்பு: 1995 இந்து<br>நட்சத்திரம்: அச்சுவினி 2<br>கி.பா: சூரி 7 செவ் 6 இல்<br>தகைமை/ தொழில்: தர நிர்ணய அதிகாரி<br>எதிர்பார்ப்பு: சாதாரண படித்த பெண் வெளிநாடு விரும்பத்தக்கது<br>தொ.இ: B/13183 | பிறப்பு: 1981 கிறிஸ்தவம் RC<br>உயரம்: 159 cm .<br>தகைமை/ தொழில்: A/L (இத்தாலி)<br>எதிர்பார்ப்பு: வெளிநாடு விரும்பத்தக்கது<br>தொ.இ: G/11363 |

**கல்யாணமாலை**

இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்

தொடர்பு:- 021 720 1005, 021 221 5434

E-mail:- kalyanamalai.jaffna@gmail.com

அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை

விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை

பதிவுக் கட்டணம் 1500 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 500 அறவிடப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடலட்டை பண்ணைக்கு எதிராகப் போராடிய 10 பேருக்கு அழைப்பாணை

(முறிகண்டி)

கிராஞ்சியில் கடலட்டை பண்ணைக்கெதிராகப் போராடும் 10 பேருக்கு நீதிமன்ற அழைப்பாணை விடுக்கப்பட்டுள்ளதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

கிளிநொச்சி பூநகரி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கிராஞ்சி பகுதியில் கடலட்டை பண்ணைக்கெதிராக 65 ஆவது நாளாக மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்த நிலையில், கிளிநொச்சி மாவட்ட நீதிமன்றினால் 10 பேருக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டுள்ளது. குறித்த போராட்டத்தில் ஈடுபட்டுள்ள 10 பேருக்கே இவ்வாறு மன்றினால் அழைப்பாணை அனுப்பப்பட்டுள்ளதாக மக்கள் தெரிவிக்கின்றனர். வழக்குத் தொடர்பில் தமக்கு எதுவும் தெரியாது எனவும் அவர்கள் தெரிவிக்கின்றனர்.

அண்மையில் போராட்டத்தில் ஈடுபட்டிருந்த இருவர் எவ்வித காரணமுமின்றி பொலிஸாரால் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டு பின்னர் விடுவிக்கப்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

(4-100-316)

# 400 வெளிநாட்டு வேலைவாய்ப்பு நிறுவனங்களின் உரிமம் தடை

(கொழும்பு)

சுற்றுலா விசாவில் ஆட்களை வெளிநாடுகளுக்கு அனுப்பிய 400 வெளிநாட்டு வேலைவாய்ப்பு நிறுவனங்களின் உரிமம் தடை செய்யப்பட்டுள்ளது என அமைச்சர் மனுஷ நாணயக்கார நேற்று சனிக்கிழமை பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

வரவு- செலவுத்திட்டத்தில் தொழிலாளர் அமைச்சின் செலவீனங்கள் மீதான வரவு- செலவுத் திட்ட குழு விவாதத்தின் போதே அமைச்சர் இதனைத் தெரிவித்தார். (4)

# சீன நாட்டின் அரிசி கிளிநொச்சிக்கு வருகை



(தருமபுரம்)

சீனா நாட்டில் இருந்து வட மாகாணத்துக்கு சுமார் 9 இலட்சம் கிலோகிராம் அரிசி பாடசாலை மாணவர்களுக்கு என சீன அரசாங்கம் வழங்கியுள்ளது.

கல்வி அமைச்சின் வேண்டுகோளுக்கு அமைவாக சீனாவுடனான இலங்கையின் இராஜதந்திர உறவு மூலம் சீனா நாட்டிடமிருந்து இவ் அரிசி இறக்குமதி செய்யப்பட்டு மாகாண கூட்டுறவு சங்கங்களின் சமாசத்திடம் ஒப்படைக்கப் பட்டு நேற்று கிளிநொச்சி அரச தானிய களஞ்சியசாலையில் களஞ்சியப்படுத்தப்பட்டு எதிர்வரும் நாட்களில் மாணவர்களுக்கு வழங்கப்படவுள்ளது. பாடசாலை மாணவர்களுக்கு ஊட்டச்சத்து குறைவாகக் காணப்படுவதால் இவ்வாறான இராஜதந்திர உறவு மூலம் உதவிகள் பெறப்பட்டு வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்க விடயமாகும். (4-316)


## அருள்மிகு காளி அம்பாள் தேவஸ்தானம்
## கன்னாதிட்டி யாழ்ப்பாணம்

**அர்ச்சனை சீட்டு விற்பனை உதவி கணக்குப் பதிவாளர் பதவிக்கு ஆள் தேவை**

சைவ சமயத்தைச் சார்ந்தவராகவும் அதன் ஒழுக்கநெறிகளை கடைப்பிடிப்பவராகவும் எழுபது வயதுக்கு மேற்படாத ஆரோக்கியமானவராகவும் கிட்டிய தூரத்தில் வசிப்பவராகவும் தொண்டு அடிப்படையிலும் கடமையாற்றக்கூடியவராகவும் இருத்தல் வேண்டும். மேற்குறித்த தகைமையுடையோர் டிசெம்பர் 15 ஆம் திகதிக்கு முன் தங்கள் சுயவிபரக்கோவையை தலைவர் அல்லது செயலாளரிடம் நேரில் அல்லது மேற்குறிப்பிட்ட விலாசத்திற்கு அனுப்பி வைக்கவும். சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

(13662) செயலாளர்


# 5ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 1957 - 02 - 24



மறைவு 2017 - 12 - 01

அமரர்.திரு.

## சிங்காரவேலு யோகநாதன்

(உரிமையாளர்- Ogesta)

திதி- துவாதசி

உழைப்பின் சிகரமாய்
உண்மையின் உறைவிடமாய்
உறவுகளுக்காக வாழ்ந்தவரே!
எம் குடும்ப வழிகாட்டியாக
எங்களுக்காகவே வாழ்ந்தவரே!
ஆண்டுகள் ஐந்து கடந்தாலும்
அழியாது என்றும் உம் நினைவுகள்.

[13663]

185/1, கில்னர் லேன்,
யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்.

# இராசிபலன்

04.12.2022
கார்த்திகை 18, ஞாயிற்றுக்கிழமை
ஏகாதசி முற்பகல் 8.12 மணிவரை

ரேவதி முற்பகல் 09.08 மணிவரை
சுபநேரம் -09.15-10.45 மணிவரை
இராகுகாலம் - 04.45-06.15 மணிவரை

ஏகாதசி விரதம்
சந்திராஷ்டமம்-உத்தரம்

வளவன்

**மேஷம்** வீட்டில் சில மாற்றங்களை செய்ய முற்படுவீர்கள், பெரிய மனிதர்களின் சந்திப்புகள் இடம்பெறலாம், கற்பனை மிகுதியான நாள், போசன சுகமுண்டு.

**கடகம்** தொழில் வளர்ச்சி கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், திட்டமிட்ட கரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், கொடுத்த வாக்கைக் காப்பாற்றி மகிழ்வீர்கள்.

**துலாம்** சுற்றத்தார் வருகையால் சுகம் கூடும் நாள், எடுத்த காரியங்களில் எளிதில் முன்னேற்றம் காணும் நாள், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள்

**மகரம்** நண்பர்கள் நம்பிக்கைக்குரியவர்களாக நடந்து கொள்வர், பயணங்களால் பலனுண்டு, விருந்துகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு, சுப விரயங்கள் கூடும் நாள்.

**ரிஷபம்** இடமாற்றச் சிந்தனை மேலோங்கும் நாள், எடுத்த காரியங்களில் அதிக பிரயாசை காட்ட வேண்டிய நாள், சுப காரியச் செய்திகளில் தாராளம் காட்டுவீர்கள்.

**சிம்மம்** மறைமுகப் போட்டிகளையும் எளிதில் சமாளிப்பீர்கள், சிந்தித்துச் செயற்பட்டு சிறப்புக்களைக் காணும் நாள், பூர்வீகச் சொத்துக்களால் நன்மையுண்டு.

**விருச்சிகம்** இல்லத்தில் உள்ளவர்களின் நலனில் அக்கறை காட்டுவீர்கள், செயற்பாடுகளில் உற்சாகம் காட்டுவீர்கள், போசன சுகமுண்டு, வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**கும்பம்** பிறருக்கு உதவும் எண்ணம் உருவாகும், வியாபார விருத்தியுண்டு, சுதந்திரமாகச் செயற்படுவீர்கள், போசன சுகமுண்டு, உறவினர்கள் வழியில் ஒத்துழைப்பு கிடைக்கும் நாள்.

**மிதுனம்** இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும் நாள், புதிய மனிதர்களின் சந்திப்பு இடம்பெறலாம், பொதுநல ஈடுபாட்டால் புகழ் பெறுவீர்கள், காரிய அனுகூலமுண்டு.

**கன்னி** வழிபாட்டால் சுகம் காண வேண்டிய நாள், மனதில் இனம் புரியாத கவலைகள் தேன்றி மறையும், உடல்நலனில் கவனம் செலுத்தும் சூழ்நிலை ஏற்படலாம்.

**தனுசு** பொன்னான எதிர்காலத்தை அமைக்க புதியவழி பிறக்கும், வழிபாட்டால் குதூகலம் காண வேண்டிய நாள், புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**மீனம்** மனதில் உற்சாகமும் மகிழ்ச்சியும் அதிகரிக்கும் நாள், பணத் தேவைகள் எளிதில் பூர்த்தியாகும், புதிய பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும்.

பொறுமையுள்ள மனிதன் நிச்சயம் வெற்றி பெறுவான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதவி பற்றி பேசுவோர் அதிகம்;
அதைச் செய்வோர் மிகக் குறைவு.
– டெனிகஸான்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## தீர்வுக்கான உங்களின் நடவடிக்கை என்ன?

நேர்ச்சிந்தனை மிகவும் முக்கியமானது. நல்லது நடக்கும். தீர்வு கிடைக்கும். தீர்வு தருவதற்கு அரசாங்கம் மறுத்தாலும் உலக நாடுகள் எமக்கு உதவும். சர்வதேச சமூகத்தின் அழுத்தம் காரணமாக இலங்கை ஆட்சியாளர்கள் இனப் பிரச்சினைக்கு தீர்வு கண்டே ஆகவேண்டும் என்பதான சிந்தனைகளும் நம்பிக்கைகளும் எம்மிடம் இருக்க வேண்டும். அப்போதுதான் அவை நிறைவேறும்.

இதைவிடுத்து இனப்பிரச்சினைக்கு தீர்வு கிடைக்காது. பேச்சுவார்த்தையில் பங்கேற்று எந்தப் பயனும் இல்லை. சமஷ்டி தரமாட்டார்கள் என்ற கருத்துக்கள் முன்வைக்கப்படுமாயின், அவை சகுனப் பிழையாகிவிடும்.

இதை நாம் கூறும்போது, அப்படியானால் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இனப் பிரச்சினைக்குத் தீர்வு தருவாரா? அவர் தருகின்ற தீர்வு சுயநிர்ணய உரிமை உள்ள மக்களாக எங்களை வாழ வைக்குமா? என்று யாரேனும் கேட்கலாம்.

அப்படியொரு கேள்வி எழுப்பப்படுமாயின், நாம் முன்வைத்த கருத்து உள்ளவாறு புரிந்து கொள்ளப்படவில்லை என்றே கருத வேண்டும்.

ஆம், பேச்சுவார்த்தைக்கு வாருங்கள் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அழைக்கும்போது, பேச்சுவார்த்தைக்குப் பேசமாட்டோம் என்று நாம் கூறுவோமாயின், இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதில் தமிழ் அரசியல் தரப்புகளுக்கு விருப்பமில்லை. அவர்கள் சுமுகமான சூழல் ஏற்படுவதைத் தடுக்கின்றனர் என்பதான கருத்துருவாக்கம் சர்வதேச சமூகத்தில் ஏற்படுத்தப்படும்.

அவ்வாறானதொரு கருத்தை சர்வதேச சமூகம் உள்வாங்கிக் கொள்ளுமாயின் அது தமிழ் மக்களுக்குப் பெரும் பாதிப்பாகவும் சிங்கள தரப்புக்குச் சாதகமாகவும் அமைந்துவிடும்.

எனவே பேச்சுவார்த்தைக்கு வாருங்கள் என ஜனாதிபதி ரணில் அழைக்கும்போது வருகின்றோம். ஆனால் பேச்சுவார்த்தையின் நகர்வை – அதன் போக்கை கண்காணிப்பதற்கும் வளப்படுத்துவதற்கும் வெளிநாட்டு வளவாளர்கள் அல்லது நடுவர்கள் இருக்க வேண்டும்.

அவ்வாறு வெளிநாட்டுப் பிரதிநிதிகள் அனுசரணையாக இருக்கும்போதுதான் பேச்சுவார்த்தை இடையில் முறிவடையாமல் தொடர்ந்து நடைபெறுவதற்கும் இலக்கை எட்டுவதற்கும் வசதியாக இருக்கும் என்ற கருத்தை நாம் வலியுறுத்த வேண்டும்.

அவ்வாறு கூறும்போது அது ஒரு நியாயமான கோரிக்கை என்பதை சர்வதேச சமூகம் ஏற்றுக் கொள்ளும்.

இதைவிடுத்து சமஷ்டி கிடைக்காது என்று நாம் கூறுவோமாயின் எங்களின் தீர்வுக்கான அடுத்த கட்ட நடவடிக்கை என்ன? இது விடயத்தில் தமிழ் அரசியல் தரப்புகள் அமைத்துள்ள வியூகம் எத்தன்மையது என்பதை சம்பந்தப்பட்டவர்கள் தெளிவுபடுத்த வேண்டும்

இதைவிடுத்து பாராளுமன்றம் செல்வது பத்திரிகையாளர் மாநாட்டை நடத்துவது என்றவாறு காலம் கடத்தலாமென்று யார் நினைத்தாலும் அது மிகப்பெரும் ஆபத்தாக அமையும் என்பதை அனைத்துத் தமிழ்த் தரப்புகளும் புரிந்து கொள்ள வேண்டும்.

### அரச நிறுவனங்களில்
# விசேட தேவையுடையோரின் நலனுக்காக புதிய வேலைத்திட்டம்- ஜனாதிபதி ரணில்

விசேட தேவையுடையவர்களின் நலனுக்காக புதிய வேலைத்திட்டமொன்று தயாரிக்கப்படும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

விளையாட்டு, சுகாதாரம், இளைஞர் விவகாரம் உள்ளிட்ட பல அமைச்சுக்களின் ஒத்துழைப்புடன் தயாரிக்கப்படும் இப்புதிய வேலைத் திட்டத்தை விரைவில் அமைச்சரவையில் சமர்பிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் ஜனாதிபதி சுட்டிக்காட்டியுள்ளார்.

2022 ஆம் ஆண்டுக்கான சர்வதேச மாற்றுத்திறனாளிகள் தினத்தை முன்னிட்டு நேற்று அலரி மாளிகையில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த தேசிய நிகழ்வில் கலந்து கொண்டபோதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்துள்ளார்.

பல்வேறு திறன்களைக் கொண்ட விசேட தேவையுடையவர்கள் இருப்பதனால், அவர்களின் படைப்புத் திறமைகளை நாட்டின் எதிர்கால அபிவிருத்திக்காக திறம்பட பயன்படுத்த வேண்டியதன் அவசியத்தையும் ஜனாதிபதி இங்கு வலியுறுத்தியுள்ளார்.

அரச நிறுவனங்களில் விசேட தேவையுடையோரின் நலன் தொடர்பில் நிலவும் குறைபாடுகள் குறித்து கவனத்திற்கு கொண்டு வந்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, அது தொடர்பில் ஆராய்ந்து அத்துறைகளில் வசதிகளை மேம்படுத்த நடவடிக்கை எடுப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுப்படுத்துகை அமைச்சு மாற்றுத்திறனாளிகளுக்கான தேசிய தலைமைச் செயலகத்துடன் இணைந்து ஏற்பாடு செய்திருந்த இந்நிகழ்வில் பிரதமர் தினேஷ் குணவர்தன, சமூக வலுப்படுத்துகை இராஜாங்க அமைச்சர் அனுப பெஸ்குவல், மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுப்படுத்துகை அமைச்சின் செயலாளர் நீல் பண்டார ஹபுஹின்ன, மாற்றுத்திறனாளிகளுக்கான தேசிய தலைமைச் செயலகத்தின் பணிப்பாளர் அனுராதா ஹேரத் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர். (4)

# தனியார் ஊழியர்களின் அடிப்படை சம்பளத்தை 21 ஆயிரமாக மாற்ற வேண்டும்

### முன்னாள் தொழில் அமைசசர் ஜோன் செனவிரத்ன

(கொழும்பு)

தனியார் ஊழியர்களின் அடிப்படைச் சம்பளத்தை 21 ஆயிரமாக அதிகரிப்பதற்கு அனைத்து தரப்பினரும் இணக்கம் தெரிவித்திருந்தபோதும் இதுவரை அது வழங்கப்படுவதில்லை. அது தொடர்பான வர்த்தமானி அறிவிப்பு வெளிடப்படாமல் இருப்பதே அதற்கு காரணமாகும்.

அதனால் வர்த்தமானி அறிவிப்பை விரைவாக வெளியிட நடவடிக்கை எடுக்கவேண்டும் என முன்னாள் தொழில் அமைச்சர் ஜோன் செனவிரத்ன தெரிவித்தார்.

தொழில் அமைச்சில் கடந்த காலங்களில் பல்வேறு தீர்மானங்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. என்றாலும் அவ்வாறு எடுக்கப்பட்ட தீர்மானங்களில் பல இன்னும் நடைமுறைக்கு வரவில்லை.

குறிப்பாக தனியார் ஊழியர்களின் அடிப்படைச் சம்பளம் தொடர்பில் தீர்மானம் மேற்கொண்டோம்.

நான் தொழில் அமைச்சராக இருக்கும்போது தான் 7ஆயிரமாக இருந்த தனியார் ஊழியர்களின் அடிப்படைச் சம்பளத்தை 10ஆயிர மாக மாற்றினோம்.

பின்னர் நிமல் சிறிபாலடி சில்வா அதனை 12ஆயிரத்தி 500ரூபா வரை அதிகரிக்க நடவடிக்கை எடுத்தார் அதன் பிரகாரம் தற்போது தனியார் ஊழியர்களின் அடிப்படைச்சம்பளம் 16 ஆயிரம் வரை வழங்கப்படுகின்றது.

என்றாலும் நாட்டின் தற்போதைய வாழ்க்கைச்செலவு மற்றும் பொருளாதார நிலைமையை கருத்திற்கொண்டு தனியார் ஊழியர்களின் அடிப்படைச்சம்பளத்தை 21ஆயிரமாக நிர்ணயிக்க அண்மையில் நடவடிக்கை எடுக்கப்பட்டது.

அதனை மேற்கொள்ள அனைத்து தரப்பினரும் இணக்கம் தெரிவித்திருந்தனர். ஆனால் அது தொடர்பான வர்த்தமானி அறிவிப்பு இதுவரை வெளியிடப்படவில்லை.

அதன் காரணமாக 21ஆயிரம் ரூபா அடிப்படைச் சம்பளம் நடைமுறைக்கு வரவில்லை. அதனால் இதுதொடர்பான வர்த்தமானி அறிவிப்பை விரைவாக வெளியிட தொழில் அமைச்சர் நடவடிக்கை எடுக்கவேண்டும் என கேட்டுக்கொள்கின்றேன்.

என்றாலும் தொழிற்சங்கங்கள் தனியார் தொழிலாளர்களின் அடிப்படைச் சம்பளத்தை 24ஆயிரம் அல்லது 26ஆயிரமாக அதிகரிக்கவேண்டும் என தெரிவித்து வருகின்றன.

என்றாலும் தற்போது இணக்கப்பாட்டுக்கு வந்திருக்கும் 21ஆயிரத்தை தற்போதைக்கு வர்த்தமானி மூலம் அறிவிக்க வேண்டும் என்றார். (ம-7)

## ஓய்வுபெற்ற அரச அதிகாரிகளின் வாகனங்களின் உரிமையை மாற்றுவது நிறுத்தம்

(கொழும்பு)

அரச நிறுவனங்களில் ஓய்வுபெற்ற அதிகாரிகளுக்கு உத்தியோகபூர்வ வாகனங்களின் உரிமையை மாற்றுவது உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் நிறுத்தப்பட்டுள்ளதாக அரசாங்கம் அறிவித்துள்ளது.

அரச நிறுவனங்களின் அதிகாரிகளுக்கு உத்தியோகபூர்வ வாகனங்களின் உரிமையை மாற்றுவது குறித்து பொது நிறுவனங்களுக்கான குழு கவலை தெரிவித்ததை அடுத்து இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக நிதி, பொருளாதார ஸ்திரப்படுத்தல் மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்நிய செலாவணி நெருக்கடி காரணமாக வாகனங்களை இறக்குமதி செய்வதையும் அரசாங்கம் கட்டுப்படுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை திங்கட்கிழமை காலை 09.00 மணியிலிருந்து மாலை 5 மணிவரை **மன்னார் பிரதேசத்தில்** மூர் வீதி ஆகிய இடங்களிலும் மின்சாரம் தடைப்படும்.

### எதிர்க்கட்சித் தலைவரின்
## கண்ணாடி மாளிகை மீது கல் வீசப்படும் - டயானா

(கொழும்பு)

எதிர்க்கட்சித் தலைவரின் கண்ணாடி மாளிகையை அழிக்க விரைவில் கல் எறியப்படும் என சுற்றுலாத்துறை இராஜாங்க அமைச்சர் டயானா கமகே பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

கட்சியைக் கொடுத்து சஜித் பிரேமதாசவை எதிர்க்கட்சித் தலைவராக்கியவர் தாம் என்றும் டயானா கமகே தெரிவித்தார்.

"அந்த கண்ணாடி வீட்டை அழிக்க நான் கல்லை அடிக்க விரும்புகிறேன்," என இராஜாங்க அமைச்சர் டயானா கமகே பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.


வரவு-செலவுத் திட்டம் மீதான வரவு-செலவுத் திட்ட குழு விவாதத்தின் போதே டயானா கமகே இவ்வாறு தெரிவித்தார். (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போராட்டத்தை முடக்க முயற்சித்தால் விளைவுகள் விபரீதம் ஆகும்

## சரத் பொன்சேகா எச்சரிக்கை

**(கொழும்பு) சண்டியர்களை கொண்டு மக்கள் போராட்டத்தை முடக்க முயற்சித்தால் பாரதூரமான விளைவுகளே ஏற்படும் என பாராளுமன்ற உறுப்பினர் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.**



மேலும் சண்டியர்களை வெளியேற்றாமல் உரிமைக்காக போராடும் மக்களை காலிமுகத்திடலில் இருந்து வெளியேற்றும் பொலிஸாரின் செயற்பாடுகள் வெட்கக்கேடானது என்றும் சாடியுள்ளார்.

பாராளுமன்றில் நேற்று முன்தினம் இடம்பெற்ற வரவு-செலவுத் திட்டம் மீதான குழுநிலை விவாதத்திலேயே பாராளுமன்ற உறுப்பினர் சரத் பொன்சேகா இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

உணர்வு பூர்வமாகவும் வெளிப்படைத்தன்மையுடன் உதைபந்தாட்ட போட்டியினை கட்டார் நாட்டின் இளவசர் ஒழுங்குபடுத்தியதாக சரத் பொன்சேகா சுட்டிக் காட்டினார்.

இதன் காரணமாகவே அங்கு போட்டிகள் சிறப்பாக இடம்பெறுகின்றன என்றும் இதனை சிறந்த உதாரணமாக எடுத்துக் கொள்ள வேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளார்.

இலங்கையில் அரசராகும் கனவுடன் கடந்த காலத்தில் இருந்த ஒருவரிடம் இவ்வாறான செயற்றிட்டம் வழங்கப்பட்டிருந்தால் வங்குரோத்து நிலை அடைந்துள்ள நாட்டில் மிகுதியாக உள்ள வளம் கூட மோசடி செய்யப்பட்டிருக்கும் என்றும் தெரிவித்துள்ளார். (4)

# துறைமுகங்கள் மூலம் அதிகளவு இலாபம்



(கொழும்பு)

துறைமுகம் இலாபகரமான நிறுவனமாக மாறியுள்ளதாக அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இதேவேளை கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் இந்த வருடம் துறைமுகம் 24 பில்லியன் ரூபாய் இலாபத்தை ஈட்டியுள்ளது.

மேலும் எதிர்காலத்தில் 6 பயணிகள் கப்பல்கள் இலங்கைக்கு வரவுள்ளதாகவும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார். (4)

# குத்தகை அடிப்படையில் விமானங்கள் கொள்வனவு

(கொழும்பு)

ஸ்ரீ லங்கன் விமான நிறுவனம் குத்தகை அடிப்படையில் புதிதாக சில விமானங்களை கொள்வனவு செய்யவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

குத்தகை அடிப்படையில் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ள விமானங்களின் காலம் நிறைவடைகின்றமையினால் அமைச்சரவை அனுமதியுடன் புதிதாக குத்தகை அடிப்படையில் விமா னங்களை கொள்வனவு செய்ய உள்ளதாக துறைமுகங்கள் மற்றும் விமான சேவைகள் அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கு அடுத்த மூன்று மாதங்களில் அதிகளவான சுற்றுலாப் பயணிகள் வருகை தருவார்கள் என எதிர்பார்க்கப்படுவதால் சிறப்பான சேவையை வழங்கவுள்ளதாகவும் துறைமுகங்கள் மற்றும் விமான சேவைகள் அமைச்சர் தெரிவித்துள்ளார். (4)

# கோட்டாவை விரட்டியடித்ததை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள்

## ரணிலுக்கு சம்பிக்க அறிவுரை



(கொழும்பு)

"கோட்டாபய ராஜபக்ஷவுக்கு ஏற்பட்ட அதே நிலைமை ஏனையவர்களுக்கும் ஏற்படும் என்பதை தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உணர வேண்டும்" இவ்வாறு 43 ஆம் படையணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது

மக்களால் ஓட ஓட விரட்டப்பட்ட கோட்டாபய ராஜபக்ஷ சாதாரண ஜனாதிபதி அல்ல. 69 இலட்சம் வாக்குகளைப் பெற்றவர். ஜே.ஆரைப் போன்று முழுமையான நிறைவேற்று அதிகாரத்தைக் கொண்டவர்.

அரச நிர்வாகத்தை இராணுவ அதிகாரிகளை நியமித்து கைக்குள் எடுத்தவர். அப்படிப்பட்ட பலமான ஜனாதிபதியைத்தான் மக்கள் நேரில் களமிறங்கி விரட்டியடித்தார்கள்.

அவருக்கு ஏற்பட்ட நிலைமை வேறு ஒருவருக்கும் ஏற்படாது என்று சொல்ல முடியாது.

தனக்கு விருப்பம் இல்லாத அரசைத் தேர்தல் மூலம் தோற்கடிப்பது போல் நேரடியாக வீதியில் களமிறங்கியும் தோற்கடிக்க முடியும் என்று மக்கள் நிரூபித்துள்ளார்கள்.

மக்களின் தற்போதைய போராட்டத்தை முறியடிப்பதற்காகப் பாடுபடும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இதை உணர வேண்டும்" எனத் தெரிவித்தார். (4)

# மக்கள் போராட்டம் மீண்டும் வெடிக்கும்

## எதிர்க்கட்சி

(கொழும்பு)

"இலங்கையில் உக்கிரமடைந்து செல்லும் பொருளாதார நிலைமை காரணமாக மீண்டும் மக்கள் போராட்டம் வெடிக்கும். அவர்கள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் எச்சரிக்கைக்கு அஞ்சப் போவதில்லை" இவ்வாறு பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி தெரிவித்துள்ளது.

"மக்கள் இனிப் போராட்டம் நடத்தினால் இராணுவத்தைக் கொண்டு அடக்குவேன்" என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மீண்டும் மீண்டும் கூறி வருகின்றமை தொடர்பில் ஐக்கிய மக்கள் சக்தியின் கொழும்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் கருத்துத் தெரிவிக்கும் போதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது

"ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இப்போது நன்றாகக் குழம்பிப் போய் இருக்கின்றார். நாட்டின் நிலைமை மேலும் மேலும் மோசமடைந்து கொண்டு செல்கின்றதே தவிர முன்னேற்றமடையவில்லை.

இதனால் மீண்டும் மக்கள் வீதிக்கு வருவார்கள். இதை உணர்ந்ததால்தான் ஜனாதிபதி இந்த நாட்டு மக்களுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளார். அவர்களை இராணுவத்தைக் கொண்டு அடக்குவேன் என்று ஜனாதிபதி கூறியுள்ளார். மக்கள் இதற்கெல்லாம் அஞ்சப் போவதில்லை. அவர்கள் மீண்டும் வீதிக்கு வருவார்கள் எனத் தெரிவித்தார். (4)

# அடுத்த வருடம் முதல் 5 G தொழில்நுட்பம்?




(கொழும்பு)

5G தொழில்நுட்பம் தொடர்பான வர்த்தக நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்கு தேவையான ஏற்பாடுகள் அடுத்த வருடம் மேற்கொள்ளப்படும் என இலங்கை தொலைத்தொடர்பு ஒழுங்குமுறை ஆணைக்குழு தெரிவித்துள்ளது. தொழில்நுட்பம் தொடர்பான அமைச்சர்களின் ஆலோசனைக் குழுக் கூட்டத்தில் இணையத்தள சேவை வழங்குநர்களால் அறிமுகப்படுத்தப்பட உள்ள 5G தொழில்நுட்பத்துக்கு தொலைத் தொடர்பு ஒழுங்குமுறை ஆணையத்தின் அனுமதி தொடர்பில் ஆலோசிக்கப்பட்டது.

இதேவேளை தொழில்நுட்ப அமைச்சின் கீழ் நாடளாவிய ரீதியில் விதாதா தொழில் நுட்ப நிலையங்களை மீண்டும் செயற்படுத்துவது தொடர்பில் முன்மொழிவு ஒன்று சமர்ப்பிக்கப்படும் என தொழில்நுட்ப இராஜாங்க அமைச்சர் கனக ஹேரத், தொழில்நுட்ப அமைச்சின் ஆலோசனைக் குழுவில் தெரிவித்தார். (4)

# சாரதியின் முயற்சியால் விபத்து முறியடிப்பு

(பதுளை)

பதுளை ஸ்பிரிங்வெளியில் இருந்து பதுளை நோக்கி வந்து கொண்டிருந்த தனியார் பேருந்து ஒன்று நேற்று ஸ்பிரீங் வெளி செல்லும் வீதியில் தும்பிலியாவ பகுதியில் வீதியை விட்டு விலகி விபத்துக்குள்ளாக இருந்த நிலையில் சாரதியின் சாதுர்யமான முயற்சியினால் பாரிய விபத்து ஒன்று தடுத்து நிறுத்தப்பட்டுள்ளது.

குறித்த பேருந்தில் கிட்டத்தட்ட 50பேர் வரை பயணித்ததாகவும் இதில் அதிகளவானோர் பாடசாலை மாணவர்கள் எனவும் இவர்கள் அனைவரும் கருத்தரங்கு ஒன்றுக்கு குறித்த பேருந்தில் வருகை தந்ததாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

பேருந்தில் பயணித்த எவருக்கும் எதுவித சேதங்களும் ஏற்படவில்லை. மேலதிக விசாரணைகளை பதுளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (4)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## தங்கைக்கு...

கரவெட்டியைச் சேர்ந்த தவராசா தர்சிகா (25) என்பவரே உயிரிழந்தவராவார். இவர் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் கலைப்பீடத்தில் கல்வி பயின்றுள்ளார்.

சுமார் ஒன்றரை வருடங்களின் முன்னர் இவருக்கு பதிவுத் திருமணம் நடந்துள்ளது. தற்போது பெற்றோருடன் வசித்து வந்துள்ளார்.

தற்கொலைக்கு முன்னதாக தனது சகோதரிக்கு கடிதமொன்றையும் எழுதி வைத்துள்ளார். அதில், தனது மரணத்திற்கு தானே காரணம் என்றும், பெற்றோரைக் கவனமாக பார்த்துக் கொள்ளும் படியும் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், தொலைபேசிப் பாவனை பற்றிய சில அறிவுரைகளையும் தங்கைக்கு அதில் குறிப்பிட்டுள்ளார்.

தற்கொலை செய்வதற்கு முன்னதாக அவர் தொலைபேசியில் நீண்டநேரம் உரையாடிக் கொண்டிருந்ததாக பெற்றோர் குறிப்பிட்டுள்ளனர்.

இதேவேளை, குறிப்பிட்ட மாணவி பல்கலைக்கழகத்தில் கல்வி பயின்ற போது பகிடிவதை காரணமாக மன உளைச்சலுக்கு உள்ளாகியிருந்ததாக குடும்பத்தினர் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் கரவெட்டி மரண விசாரணை அதிகாரி வே. பாஸ்கரன் விசாரணைகளை மேற்கொண்டு உடற்கூற்று பரிசோதனைக்கு உத்தரவிட்டுள்ளார். (ம-7,60)

## பயங்கரவாத...

பொருளாதார மறுசீரமைப்பு தொடர்பில் எதிர்க்கட்சிகளின் பிரதம கொறடா எழுப்பிய கேள்விகளுக்கு பதிலளிக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிட்டதாவது,

நாட்டு மக்களின் அபிலாசைக்கு முரணாக அரசாங்கம் செயற்படுவதாக குறிப்பிடுவதை ஏற்க முடியாது. போராட்டத்தின் ஊடாக மக்கள் முன்வைத்த கோரிக்கைகள் அரசியலமைப்பின் பிரகாரம் நிறைவேற்றப்பட்டுள்ளன.

நாட்டின் அரசியல் மற்றும் பொருளாதார மறுசீரமைப்புக்காக உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

அரசியல் மற்றும் பொருளாதார மறுசீரமைப்புக்காக பாராளுமன்ற மட்டத்தில் அனைத்து அரசியல் கட்சிகளையும் உள்ளடக்கிய வகையில் தேசிய சபை, துறைசார் மேற்பார்வை குழு நியமிக்கப்பட்டுள்ளதுடன், புதிதாக மூன்று விசேட தெரிவுக் குழுக்களை அமைக்க அவதானம் செலுத்தப்பட்டுள்ளது.

பொருளாதார மறுசீரமைப்புக்காக நடைமுறையில் இருந்த சட்டங்கள் திருத்தம் செய்யப்பட்டுள்ளன. சமூக கட்டமைப்பிற்கு வலுச் சேர்க்கும் வகையில் விசேட தேவையுடையவர்களுக்கான சட்டம் ஜனநாயகத்தை பாதுகாக்கும் சட்டங்கள் காலத்தின் தேவைக்கமைய திருத்தம் செய்யப்படவுள்ளன.

பயங்கரவாத தடை சட்டத்திற்கு பதிலாக பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் இயற்றுவதற்கான சட்டமூலம் இன்னும் இரு மாத காலத்திற்குள் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும் என்றார். (ம-7)

## வீட்டில் இருந்த...

முறையின் மூலம், விண்ணப்பதாரர் கைரேகை போன்ற பயோமெட்ரிக் தேவைகளை பூர்த்தி செய்ய மட்டுமே திணைக்கள அலுவலகங்களுக்குச் செல்ல வேண்டும் என அவர் கூறியுள்ளர். (ம-7)

## மதுபானக் கடை...

வேண்டும் என சுற்றுலா இராஜாங்க அமைச்சர் டயானா கமகே தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தின் வரவு-செலவுத் திட்ட குழு விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

"இரவு 10 மணிக்கு மேல் இந்த இடங்கள் மூடப்பட்டால், இலங்கை வரும் சுற்றுலா பயணிகளின் பணம் எப்படி செலவாகும், இரவு பொருளாதாரம் இல்லை என்றால், இலங்கைக்கு வரும் சுற்றுலா பயணிகள் பணத்தை செலவிட மாட்டார்கள்" என்றும் சுட்டிக்காட்டியுள்ளார்.

சுற்றுலாத் துறையின் மூலம் அதிகபட்ச வருமானம் பெற, மதுபானக் கடைகளை 24 மணி நேரமும் திறந்து வைக்க வேண்டும்.

இந்த நாட்டுக்கு வரும் சுற்றுலாப் பயணிகள் இரவில் மது அருந்த விரும்பினால், அதை வாங்க இடம் இல்லை என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ம-7)

## ஒரே தீர்வு...

பாராளுமன்றத்தில் நேற்று உரையாற்றும் போது இதனை தெரிவித்துள்ளார்.

இதன்போது [illegible] யில்.

"பிட்ச் தரப்படுத்தல் நிறுவனம் இலங்கையின் நீண்டகால உள்நாட்டுக் கடன் மறுசீரமைப்பு மிகவும் அபாயகரமான நிலையிலுள்ளதாக வகைப்படுத்தியுள்ளது.

இந்த அவதானம் குறித்து 2020 ஆம் ஆண்டு முதலே எதிர்க்கட்சியாகச் சுட்டிக்காட்டிய போதிலும் அப்போதைய ஆட்சியாளர்கள் அதனை கேலி செய்து நாட்டை தவறாக வழிநடத்தினார்கள்.

இவ்வாறான நிலையில் நாட்டின் பொருளாதாரக் கொள்கைகள் தொடர்பில் அரசு என்ன நடவடிக்கை எடுக்கப் போகின்றது? யார் என்ன சொன்னாலும் சர்வதேச, உள்நாட்டுக் கவனம் இந்த விடயத்தில் செலுத்தப்படவில்லை.

அமெரிக்கா தலைமையிலான பல மேற்கத்திய நாடுகள் எமது நாட்டில் அரசியல் மறுசீரமைப்புகள் மேற்கொள்ளப்படும் வரை எந்தவித உதவிகளையும் செய்வதில்லை என்று கூறியுள்ளன.

8 மாதங்களில் 477 மருத்துவர்களும் 300 பொறியியலாளர்களும் நாட்டை விட்டு வெளியேறியுள்ளனர்.

குழந்தைகளின் ஊட்டச்சத்து குறைபாடு அதிகரித்து வருகின்றது. சுகாதாரத்துறையில் மருந்துகள் பற்றாக்குறை உள்ளிட்ட பல பிரச்சினைகள் நிலவி வருகின்றன. இந்த அனைத்துப் பிரச்சினைகளுக்கும் ஒரே தீர்வு தேர்தல் மூலம் புதிய மக்கள் ஆணையைப்பெறுவதுதான்" என்றார். (ம-7)

## தாவ...

கோண்டாவிலைச் சேர்ந்த சிவநிதன் (வயது 34) மற்றும் இணுவிலைச் சேர்ந்த பவித்திரன் (வயது 30) ஆகிய இருவரும் வாள் வெட்டுக்கு இலக்காகிய நிலையில் யாழ் போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இரண்டு மோட்டார் சைக்கிளில் வந்த நான்குபேர் கொண்ட கும்பல் ஒன்று வாள்வெட்டு தாக்குதலை நடாத்திவிட்டு அங்கிருந்து தப்பித்துச் சென்றுள்ளதாக அறிய முடிகிறது.

இச்சம்பவம் குறித்து யாழ்ப்பாணப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

(ம-7,33,104)

## மீன்...

ஸ்தாபித்து, ஆறு மாத காலத்திற்கு பின்னர் தேர்தலை நடத்துவதுடன், அரசியலமைப்பின் 19ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்துமாறு போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் தொடர்ந்து குறிப்பிட்டார்கள்,

சர்வதேசம் மற்றும் நாட்டு மக்களின் ஆலோசனைகளுக்கு இதுவரை மதிப்பளிக்கப்படவில்லை. அரசாங்கத்தை கைவிட்டு தப்பிச் சென்றவர்கள் தற்போது மீண்டும் அரசாங்கத்தை அமைத்துள்ளார்கள் என்றார். (ம-7)

## தமிழ் மக்கள்...

எவ்வித திட்டமிடலும் இல்லாத வகையில் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் முன்னெடுக்கப்பட்ட வீடமைப்பு திட்டத்தினால் அப்பிரதேச மக்கள் பாதிக்கப்பட்டுள்ளார்கள் என்பதை ஏற்றுக்கொள்கிறேன்.

இடைநிறுத்தப்பட்டுள்ள நிர்மாண பணிகள் மீள ஆரம்பிக்கப்படும். புதிய வீடமைப்பு திட்டங்கள் ஏதும் ஆரம்பிக்கப் படமாட்டாது என வீடமைப்புத்துறை அமைச்சர் சபையில் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் சனிக்கிழமை இடம்பெற்ற 2023ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தில் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு, தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சு ஆகிய அமைச்சுகளுக்கான நிதி ஒதுக்கீடு மீதான குழு நிலை விவாதத்தில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். (ம-7)


மஹஜன சம்பத
திகதி 2022/12/03
சீட்டிழுப்பு இலக்கம் 4958
ஆங்கில எழுத்து X வெல்லப்பட்ட இலக்கங்கள் 0 5 7 1 5 4
தேசிய லொத்தர் சபை

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2022.12.03
சீட்டிழுப்பு இலக்கம் 267
வெற்றி இலக்கங்கள்: கன்னி 01 11 16 28 கன்னி
தேசிய லொத்தர் சபை

மெகா பவர்
திகதி 03/12/2022
சீட்டிழுப்பு இலக்கம் 1306
வெற்றி எழுத்து Q சுப்பர் இலக்க 06 வெற்றி இலக்கங்கள் 46 59 67 74

கொவிசெத
திகதி 2022.12.03 சீட்டிழுப்பு இலக்கம் 3200
ஆங்கில எழுத்து J வெற்றி இலக்கங்கள் 43 46 60 79
தேசிய லொத்தர் சபை

தன நிதானய
திகதி - 2022.12.03
சீட்டிழுப்பு இலக்கம் - 988
ஆங்கில எழுத்து I வெற்றி இலக்கங்கள் 40 53 56 77
NATIONAL LOTTERIES BOARD
தொலைபேசி : 011 460 7000 / 011 232 4324
உத்தியோகபூர்வ முடிவுகளுக்கு : 011 456 9416

ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு திகதி 03/12/2022
சீட்டிழுப்பு இலக்கம் 1413
வெற்றி இலக்கங்கள்: கன்னி 3 1 9 6 1 2
தேசிய லொத்தர் சபை

அத கோடிபதி ADA KOTIPATHI
சனிக்கிழமை
சீட்டிழுப்பு இல: 1759
வர்ணம் : மஞ்சள்
சீட்டிழுப்பு திகதி : 2022.12.03
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 5,010,080/-
வெற்றி இலக்கங்கள் 13 25 52 57 ஆங்கில எழுத்து A
அபிவிருத்தி லொத்தர் சபை www.dlb.lk
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

சனிதா Shanida
சனிக்கிழமை
சீட்டிழுப்பு திகதி : 2022.12.03
சீட்டிழுப்பு இல : 4094
வர்ணம் : பச்சை
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 4,824,400/-
வெற்றி இலக்கங்கள் 33 38 45 53 ஆங்கில எழுத்து U
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

ராசி அதிர்ஷ்டம்
சுப்பர் ஜக்பொட் ரூ. 5,005,422.80
திகதி 2022-12-03
வெற்றி வாரம் 3645
வர்ணம் இள நீலம்
வெற்றி இலக்கங்கள் 06 27 41 43 கும்பம்
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 8,464,660/-
வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்

28 சுப்பர் ஜக்பொட் ... அருத்த
ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
G 25 19 34 65 75
சுப்பர் இலக்கம்
சீட்டிழுப்பு வாரம் 1109
வர்ணம் சிவப்பு
திகதி 2022.12.03 சனிக்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 282,666,323.80
தொலைபேசி : 011-2 333 546-47
Web : www.dlb.lk
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

සංවර්ධන වාසනාව
அபிவிருத்தி அதிர்ஷ்டம்
உத்தியோகபூர்வ முடிவுகள்
வெற்றி வாரம் .550 திகதி 2022-12-03 வர்ணம் சிவப்பு
ஆங்கில எழுத்து A வெற்றி இலக்கங்கள் 29 , 36 62 விதி எண் 04
எதிர்வரும் சுப்பர் பரிசுப்பொதி ரூ. 14,771,616/-
6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.
வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்
தொ. பே.: 0112 333 546/47
Web: www.dlb.lk

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1933 நிறம் நீலம்
சீட்டிழுப்பு திகதி 2022.12.03 தினம் சனிக்கிழமை
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 4,345,440/-
V 08 26 39 51
ரூ.500/- பரிசுகளுக்கான 1929 ரூ.100/- பரிசுகளுக்கான 827
அபிவிருத்தி லொத்தர் சபை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முகாமை உதவியாளர் தேவை

முகாமை உதவியாளர் தேவை. சைவ ஆசாரசீலராக க.பொ.த சாதாரணதரம் தகுதியுடைய ஒருவர் எமது ஆலயத்துக்கு முகாமை உதவியாளராக பணியாற்றத் தேவை.

அருள்மி ஸ்ரீசாமுண்டாதேவி சமேத
ஞானவைரவர் ஆலயம்
தலையாழி - கொக்குவில்.

தொடர்புகளுக்கு - 077 535 9103, 076 622 1193

(13648)

## வேலையாட்கள் தேவை

மானிப்பாயில் அமைந்துள்ள Tourist hotel ஒன்றிற்கு chinese, Indian, srilankan உணவு சமைக்க தெரிந்த அனுபவமுள்ள வேலையாட்கள் தேவை.

தொடர்புகளுக்கு
**077 160 5090**

(13642)

## வேலையாட்கள் தேவை (பெண்கள்)

நல்லூரில் உள்ள குழந்தைகளுக்கான பொருட்கள் விற்பனை நிலையம் ஒன்றிற்கு

- கணனி வடிவமைப்பாளர்
- விற்பனை உதவியாளர்

யாழ். மாநகர எல்லைக்குள் வசிப்பவர்கள் விரும்பத்தக்கது.

**077 469 6695**
**076 166 1986**

(13658)

## SB Travels and Tours pvt ltd

தற்போது யாழ்ப்பாணம் - சென்னை - யாழ்ப்பாணம் விமான சேவை 12.12.2022 முதல் ஆரம்பம்

Colombo to chennai (இருவழி)
Indigo - 63,000/=
Srilankan airlines - 73,000/= விமான பயணச்சீட்டுக்களையும், Malaysiya, India, Bangkok, Dubai விசாக்களையும் பெற்றுத்தரப்படும்.

**SB Travels and Tours pvt ltd**
**Hotline : 075 555 9932**

No. 198, Kasthuriyar Road Jaffna - 021 222 8555, 076 691 1082, 83
No. 41, Ginthupitiya street Colombo - 13 - 011 233 3322, 076 691 1089
No. 324, Aluthmawatha road Colombo - 15 - 011 254 0280, 077 108 3481
Email : SBtravels99@yahoo.com

(C-5407)




கொக்குவில் – தலையாழி
**அருள்மிகு ஸ்ரீ சாமுண்டாதேவி சமேத**
**ஞானவைரவர் ஆலய மகா சபை**

## பொதுக்கூட்டம்

எதிர்வரும் 25.12.2022 ஞாயிற்றுக்கிழமை மாலை 4.00 மணியளவில் ஆலய சிவஞான மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

### நிகழ்ச்சி நிரல்

1 .இறைவணக்கம்
2. தலைவர் உரை
3. செயலாளர் அறிக்கை
4. பொருளாளர் கணக்கு அறிக்கை
5. புதிய நிர்வாக சபை உறுப்பினர்கள் தெரிவு
6. ஆலய முகப்பு கோபுர நிர்மாணப்பணிகள் பற்றிய கலந்துரையாடல்
7. சபையோர் குறிப்புரை

**முக்கிய குறிப்பு:-** பிரேரணைகள் எதும் இருப்பின் 18.12.2022 இக்கு முன்னர் ஆலய நிர்வாகத் திடம் எழுத்து மூலம் ஒப்படைக்கவும்.

புதிய உறுப்பினர்கள்தெரிவு செய்யப்படவுள்ளமையால் அனைத்து உபயகாரர்கள் மற்றும் வழி படுனர் பெருமக்கள் அனைவரையும் கலந்து கொள்ளும் வண்ணம் வேண்டுகின்றோம்

(13647)

இங்ஙனம் - நிர்வாக சபையினர்


## காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் கோயிலாக்கண்டி பகுதியில் 182 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.**

### நிலப்பரப்பு

- A32 பிரதான வீதியில் இருந்து 600m தூரம்.
- 18 அடிப் பாதையுடன் 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் உள்ளது.
- A32 பிரதான வீதியில் இருந்து இரு வழிப் பாதைகள் உள்ளன.
- நெய்தல் பீச்சுக்கு (Beach) அருகாமையில் உள்ளது.
- கோயிலாக்கண்டியில் இருந்து யாழ். நகரத்திற்கும் சாவகச்சேரி நகரத்திற்கும் அரச தனியார் பஸ் போக்குவரத்துச் சேவை உள்ளது.
- இக் காணியின் தெற்கு எல்லை கடற்கரை (பீச்)
- நல்ல தண்ணீர் ஊற்றுச்சூழல் (கட்டுக் கிணறும் உள்ளது)

**ஒரு பரப்பின் விலை 675,000 ரூபாய் மட்டும்**

**தரகர் தேவையில்லை**

பார்வையிடும் நேரம்
காலை 6.00 மணி தொடக்கம் மாலை 6.00 மணி வரை

தொடர்பு - ஜெயம்
**077 814 7389, 077 986 5457**

(13665)


# மரண அறிவித்தல்

## திருமதி சங்கரப்பிள்ளை அபிராமிப்பிள்ளை

**பிறப்பு - 09.12.1935** **இறப்பு - 28.11.2022**



நெடுந்தீவு மேற்கைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணம் செட்டித்தெரு நல்லூரை வதிவிடமாகவும் கொண்ட திருமதி சங்கரப்பிள்ளை அபிராமிப் பிள்ளை அவர்கள் 28.11.2022 திங்கட்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் வயித்திலிங்கம் சங்கரப்பிள்ளை அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற பொன்னம்பலம் - மீனாட்சிப்பிள்ளை தம்பதி களின் அன்பு மகளும் காலஞ்சென்ற வயித்திலிங்கம் - வள்ளியம்மை தம்பதிகளின் அன்பு மருமகளும் சிந்தாமணி குணசிங்கத்தின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்றவர்களான பொன்னையா, திருமதி தெய் வானைப்பிள்ளை கணபதிப்பிள்ளை, பொன்னம்பலம், சுப்பிரமணியம், திருமதி சின்னத்தம்பி காங்கேசு, குமாரசாமி, ஐயாத்துரை ஆகியோரின் மைத்துனியும் சத்தியவரதன் (கட்டப்பிராய்), நிர்மலா (நல்லூர்), கிருபா வரதன் (நெடுந்தீவு), கோகுலவரதன் (லண்டன்), சந்திரகலா (நல்லூர்), விஜயலதா (லண்டன்), பத்மவரதன் (கனடா), தவமேகலா (லண்டன்), பானுகலா (பிரான்ஸ்), அருள்வரதன் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் மஞ்சுளா (கட்டப்பிராய்), சிறிகரன் (நல்லூர்) பாக்கியலட்சுமி (நெடுந்தீவு), சகுந்தலாதேவி (லண்டன்), புவனேந்திரா (நல்லூர்), தரும ரத்தினம் (லண்டன்), பொன்மதி (கனடா), செல்வராசா (லண்டன்), சபேசன் (பிரான்ஸ்), ஜானகி (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமி யாரும் குமரன், குகப்பிரியன், ஜனகன், துவாரகன், மகிபன், நிருஜன், கினோஜா, மதுஷன், நிரோஷன், கிந்துஜன், அபியதர்சன், விட்டலன், லக்சினி, யனுசா, தனுசா, அனுராஜ், அபிராஜ், பானுசன், டினோசா, கபிசன், அபிசன், ஆருத் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் (இன்று) 04.12.2022 ஞாயிற்றுக் கிழமை காலை 8.00 மணியளவில் அவரது இல்லத்தில் ஆரம்பமாகி மு.ப 11.00 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தொ.இ - **077 982 5051** (13639) தகவல்: குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 04.12.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.